Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தலைமைக்கே எண். 49
தோல் 339

National Tamil Daily

பலர் 9
இதழ் 335
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புதன்கிழமை மார்கழி 29 ஷவ்வால் 12 சனிக்கிழமை [13-1-68

எகடொக்ஸ் - 50
அதிகசக்தி வாய்ந்த சர்வகிருமி நாசினி
" எகடொக்ஸ் - 50 "ஐ
உங்கள் கமத்தில் பாவித்து
அதிக இலாபத்தைப் பெறுங்கள்.
விலையோ மிகவும் மலிவு
சக்தியோ மிகவும் அதிகம்
விநியோகஸ்தர்கள்:
சிலோன் மேர்ச்சன்ஸ்
லிமிற்ரெட்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 234

புதிய சதி முயற்சி

சிறிமா தெரிவித்த புகார்: சபையில் பிரதமர் அறிக்கை

உடன் விசாரணைக்கு ஏற்பாடு

தகவல் கொடுத்து ஒத்துழைக்க அழைப்பு

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்துக்கு எதிராகவும், எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்யவும் சதித் திட்டம் வகுப்பதில் ஈடுபட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயகா புகார் தெரிவித்திருப்பது உண்மைதான் என்று பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் அறிவித்தார். இந்தப் புகார்கள் பொறுப்பு வாய்ந்த பிரமுகர்களிடமிருந்து வந்திருப்பதாகவும் அவைபற்றி உண்மைகள் பற்றி கண்டறிவதற்கான முயற்சிகளில் ஒத்துழைக்கும்படி பிரதமர் கேட்டுக் கொண்டார்.

அரசாங்கத்தைக் கவிழ்க்க நடைபெறவிருந்த சதித் திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட சிரேஷ்ட மந்திரி ஒருவரையும் மற்றும் அரசாங்க அதிகாரிகள், பத்திரிகை பிரமுகர்களையும் பொலிசார் உன்னிப்பாக கண்காணித்து வருவதாக ஒரு பத்திரிகை 'ஈழநாடு' அல்ல வெளியிட்ட செய்தியை உண்மையல்லவெனறும் வேண்டுமென்றே செய்யப்பட்ட விஷமத்தனம் என்றும் பிரதம மந்திரி தெரிவித்தார். மூன்று நாட்களுக்கு முன் எதிர்க்கட்சித் தலைவர் சதி பற்றிய தகவல்களை அறிவித்தார். இந்தச் சதி முயற்சியில், 1962-ம் ஆண்டில் நடைபெறவிருந்து முறியடிக்கப்பட்ட சதித்திட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டிருந்ததாகவும், ராணுவ, கடற்படைகளைச் சேர்ந்த சிலரும் இதில் கலந்து கொள்ளவிருந்தார்கள் என்றும் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக அவர் தெரிவித்தார். திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

அரசாங்கத்துக்கு தமிழரசு கொடுத்த காலக்கெடு

நினைவூட்டுவதற்காக வாலிப முன்னணி நாளை கூடும்

யாழ்ப்பாணம், சனி

ஜனவரி மாதம் 30-ந் திகதிக்குள் மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாவிட்டால், ஜனவரி 31-ந் திகதி தமிழரசுக்கட்சியின் பொதுச் சபை கூடி, அதன்பின் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசிக்க வேண்டுமென தமிழரசு வாலிப முன்னணி ஏற்கனவே நினைவூட்டியதை மீண்டும் வலியுறுத்தி ஞாபகமூட்டுவதற்காக யாழ்ப்பாணத்தில் நாளை கூடுகிறது.

இக் கூட்டத்தில் மட்டக்களப்பு எம்.பி.யும், தமிழரசு வாலிப முன்னணித்தலைவருமான திரு எஸ் இராசதுரை கலந்து கொள்வார் எனத் தெரியவருகிறது. சென்னையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் கல

(8-ம் பக்கம் பார்க்க)

பொலிஸாரை தாக்கிய வழக்கு:

'மூன்றும் எதிரியும் வேறு சிலரும் எம்மை தாக்கினர்கள்''

கான்ஸ்டபிள் சாட்சியம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 7-ந் திகதி பிற்பகல் 3-45 மணியளவில் நானும் அல்போர்ட் என்பவரும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திலிருந்து அரண வாய் என்ற இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றோம். அப்படிச் சென்றுகொண்டிருக்கையில் வல்வெட்டித்துறை கொத்தியால் வீதியால் ஒருவர் கையில் பையுடன் வந்துகொண்டிருந்தார். வந்தவர் எங்களைக் கண்டதும் சந்தேகமான முறையில் நடந்துகொண்டார். உடனே நாங்கள் அவர் மேல் சந்தேகம் கொண்டு தடுத்து நிறுத்தி பையில் என்னவென்று கேட்டோம். அவர் ஓட்டம் பிடிக்க முற்பட்டார். நாங்கள் பையைப் பார்க்க வேண்டுமென்று கேட்

[8-ம் பக்கம் பார்க்க[

வல்வெட்டித்துறை துப்பாக்கி சூட்டு சம்பவம்:

'இன்ஸ்பெக்டர் 'சூட்' என்று சொன்னதை கேட்டேன்; சுட்டதையும் கண்டேன்'

இறந்தவரை ஏற்றிவந்த வான் சாரதி சாட்சியம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

'இன்ஸ்பெக்டர் 'சூட்' என்று சொன்னதும் கான்ஸ்டபிள் துப்பாக்கியை நீட்டிச் சுட்டார். உடனே இறந்தவர் ஐயோ வென்று நிலத்தில் விழுந்தார். இச் சம்பவத்தை வானிலிருந்து இறங்கிய நான் சந்தைப் பக்கமாக போய் அவ்விடத்தில் நின்று பார்த்தேன். இன்ஸ்பெக்டர் சூட் என்று உத்தரவு பிறப்பித்ததை காதால் கேட்டேன். சுட்டவர் துப்பாக்கியை நீட்டிச் சுட்டதைக் கண்ணால் கண்டேன்.

என்று இறந்தவரை ஏற்றி வந்த வான் சாரதியான சிவசுந்தரம் நடராசா என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது கூறினர்.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞரை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 8-ம் திகதி பொலிஸ் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும் உடந்தையாக இருந்ததாகவும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ் ஸி. பத்திராஜா மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நடராசா தொடர்ந்தும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:- நான் வல்வெட்டித்துறையில் வசித்து வருகிறேன். சம்பவம் நடந்த தினத்தன்று வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இராமசாமிப்பிள்ளையின் பிடிக் கொம்பனி வானைத் தரதிச் சென்றேன். காலஞ் சென்றவர் இராமசாமிப் பிள்ளையின் மகனுவர்.

சம்பவ தினத்தன்று மாலை ஆறு மணிக்கு இறந்தவரும் நானும் பீடி வியாபாரத்திற்காக வல்வெட்டித்துறையிலிருந்து புறப்பட்டோம். முதலில் மானுண்டி சந்தைக்கும் நெல்லியடிக்கும் போனோம். போகும் போது வானில் பீடிகள் கொண்டு

((8-ம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவில் பரிதாப சம்பவம்

9 குழந்தைகளின் தாய் நடுக் கடலில் துடிதுடித்து மரணம்

பிரசவ வேதனையால் அவஸ்தைப் பட்டவர்

நெடுந்தீவு, வெள்ளி

பிரசவ வேதனையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த 9 குழந்தைகளின் தாய் நடுக்கடலில் துடிதுடித்து மரணமானார்

நெடுந்தீவு ஆஸ்பத்திரியிலிருந்து கடும் பிரசவ வேதனையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த திருமதி. தனுகோடி என்பவர் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். ஆனால் யாழ்ப்பாணத்துக்கு இவரை கொண்டுசெல்வதற்கு உடன் மோட்டார்ப் படகு எதுவும் கிடைக்கவில்லையாம்.

படகுக்காகக் காத்துக் கொண்டிருந்த அப் பெண் மணி நேரம் போகப்போக பிரசவ வேதனையால் உழன்றுகொண்டிருந்தார் எப்பயோ ஒரு மீன்பிடி வள்ளத்தில் இப் பெண்மணியைக் கொண்டுசெல்வதற்கு ஏற்பாடாகியது. ஆனால் நடுக்கடலில் காலன் அப்பெண் மணியின் உயிரைப் பறித்துக்கொண்டுவிட்டான்.

நெடுந்தீவில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டிருந்த அம்புலன்ஸ் மோட்டார்படகு கடந்த இரு வருடங்களாக பழுதடைந்த நிலையிலிருப்பதாலேயே இங்குள்ள நோயாளிகளுக்கு இப்படியான நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது. இந்த அம்புலன்ஸ் மோட்டார் படகு திருத்தப்படாது இருப்பதனால் இங்குள்ள மக்கள் இப்போது தமது பரிதாப நிலை குறித்து பெருத்த அச்சத்துக்கும் கவலைக்குமுள்ளாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிற 24-4-68-இல் நடைபெற இருக்கும் மாணவ ஆசிரியர் பரீட்சைக்குரிய 'பொது அறிவும்-உள்ளூர் அறிவும்' மாதிரி வினாக்களை 6-ம் பக்கத்தில் காண்க.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

இம்பீரியல் [58] தட்டெழுத்து இயந்திரம் Imperial Typewritter 24'' Carriage] நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். சி. ஆர். நவரெத்தினம், சேச் ஒழுங்கை காரை நகரி. 2063

கண்ணாடி சோக்கேஸ்கள்

தேக்கினால் செய்யப்பட்டது. 6 அடி நீளம், 4 அடி நீளம், 7 அடி உயரம் முதலிய அளவுகளில் உண்டு. நேரில் பார்வையிடலாம். 37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2058

யாழ்ப்பாண நகரம் - அம்மன் வீதி - ஆனைப்பந்தி உபதபாற்கந்தோர் சமீபமாக இன்னும் சில காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்:- ரி. வடிவநாதன், 'பூகன்ஸ்', 71, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அல்லது எச். பி. ரி. 64-ம் இலக்கம், கெய்ஸர் வீதி, கொழும்பு. 2066

மாடும், கன்றும்

அஜாய் மாடும் கன்றும் (52 நாள்) கருவுற்ற கன்னிப்பசுவும் கம்பிகளினூலான வலுவான நாய்க்கூடும் விற்பனைக்குண்டு. போயாநாட்களில் எந்நேரத்திலும், மற்றைய நாட்களில் மாலை 5 மணிக்குப் பின்பும் பார்வையிடலாம். 263, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2072

அச்சகம்

தமிழ், ஆங்கிலம் எழுத்துக்கள் தளபாடங்களுடன் நல்ல நிலைமையில் இயக்கும் அச்சகம் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- நடராசா, நம். 2. வெள்ளான்தெரு, வண்ணார்பண்ணை. 2070

கல்வி

வகுப்புக்கள்:-

மாணவ ஆசிரியர்களுக்கான பரீட்சை (ஆங்கிலம், விஞ்ஞானம், வர்த்தகம், சாதாரணம்) G.C.E. உயர்தரம் (ஆசிரியர் தில்லையம்பலம், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) விண்ணப்பங்கள்:- 1-2-68 முன். நடைபெறும் வகுப்பு:- G. C. E. சாதாரணம். பதிவாளர் கொலிஜ் ஒவ் எடியூக்கேசன் (College of Education) பழைய பஸ் நிலையம் எதிராக யாழ்ப்பாணம். 2068

தேவை

விற்பனையாளர்:

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் பொருட்களை வீடுகளுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. பெண்களுக்கு வாகனவசதி உண்டு. பிணைப்பணம் ரூபாய் 50. வியாபார அனுபவமுள்ள 500ரூபா பிணைகட்டக்கூடிய வான் சேல்ஸ்மன் ஒருவரும் தேவை. சேரா குடிசைக் கைத்தொழில் நிலையம், 5, முருகேசு லேன், நல்லூர், யாழ்ப்பாணம். 2067

தவறிவிட்டது

றிஷிஸ்றேஸன்புத்தகம்:

I C 3377 - I C 2972 No. லொறியினுடைய றிஷிஸ்றேஸன் புத்தகம் முஸ்லிம் கல்லூரி வீதிக்கும் சிவன் கோவில் சந்திக்குமிடையில் விழுந்து விட்டது. எடுத்துத் தருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். க. சிவலிங்கம், 29, மானிப்பாய்ரோட், யாழ்ப்பாணம்' 2071

WANTED

Wanted a teacher to teach Motor Mechanism. Apply immediately. Registrar, College of Higher Studies, Jaffna. 2069

"இலங்கையில் போதனாமொழி தமிழும், சிங்களமும்"

உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு கருத்தரங்கில் பண்டிதர் இரத்தினம்

சென்னை, ஜன. 12

நேற்று முன்தினம் உலகத் தமிழ் மாநாட்டு பொது அரங்கில் "தமிழ்மொழியின் வருங்காலம்" என்பது பற்றி திரு. க. சந்தானம் ஆங்கிலக் கட்டுரையொன்றை வாசித்தார்.

பிரதிநிதிகளுக்கு அதன் தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

அதில் பனற்றிக்ஸ் என்ற சொல் வருகிறது. மொழி பெயர்ப்பில் வெறியர்கள் என்ற சொல் காணப்பட்டது. மொழி பெயர்ப்பிலுள்ள அவ்வார்த்தைக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆட்சேபத்திற்கு திரு. சந்தானம்தயன் "தீவிரவாதிகள்" என மாற்றிக்கொள்வதாகக் கூறினார். அதற்கும் ம. பொ. சி. வெறியர்கள் என்று அச்சிடப்பட்டுள்ளது. வெறியர்கள் என்றால் நான் தலையாய வெறியன் வெறியர்கள் என்று கூறுவதற்கு கட்டுரையாளர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றார்,

திரு சந்தானம் அவ்வார்த்தையை வாபஸ் பெற்று வருத்தம் தெரிவித்தார்.

இஸ்ரேல் பிரதிநிதி

இந்நிலையில் இஸ்ரேல் பிரதிநிதி திரு. ராபின் எழுந்து இஸ்ரேல் நாட்டில் தாய் மொழி உடனடியாக சர்வகலாசாலைகளில் போதனா மொழியாக்கப் பட்டதாக குறிப்பிட்டு தமிழை உடனடியாக போதனா மொழியாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இப்படிச் செய்வது அவசரப்பட்ட அசட்டுத்தனமான காரியமாகத் தோன்றினபோதிலும், அவ்வாறு செய்வது நல்லதென அவர் கூறினார். தமிழைப் போதனா மொழியாக்க நீங்கள் முப்பது ஆண்டுகள் காத்திருந்தால் தமிழ் என்றுமே போதனா மொழியாகாது. முப்பது ஆண்டுக



ளில் புத்தகங்களை தமிழில் எழுதி முடித்தவுடன் அந்தப் புத்தகங்களிலுள்ள விடயங்கள் காலத்திற்கொவ்வாதவையாகி விடும். எனவே காலம் தாழ்த்தாமல் உடனடியாக தமிழில் பாடங்களைப் போதிக்கத் தொடங்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேல் பிரதிநிதியின் யோசனைக்கு திரு. சந்தானம் பதில் அளிக்க முற்படுகையில் ம. பொ. சிவஞான கிராமணியார் எழுந்து "எனது ஆட்சேபத்துக்குப் பதில் அளித்த பின்புதான் விவாதத்தைத் தொடரலாம் என்றார்.

சர்வதேச மாநாடுகளில் என்னைப் போன்றவர்கள் அவமதிக்கப்பட்டதை மறந்துவிட முடியாது" என்று ம. பொ. சி. மேலும் கூறினார்.

சந்தானம் —"வெறியர்" என்ற வார்த்தையை நான் வாபஸ் பெறுகிறேன்.

ம. பொ. சி, வாபஸ்பெறுவது போதாது வருத்தம் தெரிவிக்கவேண்டும்.

ஸ்ரீ ந. சஞ்சீவி;- வெறியர் என்பது சபையில் உபயோகிக்கக் கூடாத சொல் அதற்கு கட்டுரையாளர் மன்னிப்புக்கேட்கவேண்டும்.

சந்தானம்:- வெறியர் என்பது சபையில் உபயோகிக்கத்தகாத சொல்அல்ல ஒவ்வொருவர் ஒவ்வொரு விடயத்திலும் வெறியாயிருக்கலாம். வெறியாயிருப்பதில் தவறில்லை. இத்தச் சொல்பற்று தலைவர் தீர்ப்புக்கூறவேண்டும்.

தலைவர்:- பேச்சாளர் கூறும்கருத்துகளுக்குதலைவர் பொறுப்பு ஏறதவோ, தீர்ப்புக் கூறவோ முடியாது.

ம. பொ. சி. கட்டுரையாளர் வருத்தம் தெரிவிக்காவிட்டால் வெறியர் என்று அவர் யாரைக் குறிப்பிட்டாரோ அவர்கள் சபையிலிருந்து வெளியேற வேண்டியிருக்கும்.

(6-ம் பக்கம் பார்க்க)

'லிங்ககுமார் காருக்குள் மூர்ச்சையாகிக் கிடந்தார்'

ஆவரங்கால் கொலைவழக்கு

யாழ்ப்பாணம், சனி

"அண்ணன் தங்கராசாவை யாரோ தாக்குவதாக கேள்விப்பட்டு ஸ்தலத்துக்கு சென்றபோது அங்கு லிங்ககுமார் கார் ஒன்றுக்குள் மூர்ச்சையாகிக் கிடக்கக் காணப்பட்டார்.

ஆவரங்கால் கொலை வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதவான் திரு. அகஸ்டின் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இறந்தவரின் தம்பியான திருச்செல்வம் சாட்சியமளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வழக்கில் லிங்ககுமாரைக் கொலை செய்ததாக ஆவரங்காலைச் சேர்ந்த தம்பிராசா என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:-

காருக்குள் மூர்ச்சையாகிக் கிடந்த லிங்ககுமாருக்கு என்ன நடந்தது என அருகில் நின்றவர்களிடத்தில் விசாரித்தபோது லசையிக்கிளில் இருந்து விழுந்து விட்டதாகக் கூறினார்கள். உடனே லிங்ககுமாரை அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றோம். ன் அங்கிருந்து மந்திகை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அங்கு மரணமானார்.

விசாரணை இம்மாதம் 20ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. [ந. நி.]

குழந்தை உயிர் தப்பியது

யாழ்ப்பாணம். சனி சாவகச்சேரிசரசாலையைச் சேரந்த கந்தசாமி தேவகாந்தன் என்ற 3 வயதுக் குழந்தை பாம்புக் கடிக்கு இலக்கானது. எத்தனையோ வைத்தியங்கள் செய்தும் நிலைமை ஆபத்தான கட்டத்தை நெருங்கவே வுஷ கடி வைத்தியர் திரு. க. சிற்றம்பலத்திடம் தேவகாந்தன் எடுத்துச் செல்லப்பட்டான், திரு. சிற்றம்பலத்தின் திறமையினால் வைத்தியத்தினால் மேற்படி சிறுவன் உயிர்தப்பினன்.

இப்பொழுது நடைபெறுகிறது

1.3.68

கிங்ஸ்லி (கொட்டாஞ்சேனை) பிளாஸா (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மகிடுநகரி) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) லிபேர்ட்டி (பொறளை) மொடேர்ன் (பதுளை)



எம். ஜி. ஆர். சரோஜாதேவி அசோகன் நாகேஷ்

மற்றும் பலர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

படகோட்டி

நியூ காலிங்கன் (இணுவில்) தினசரி 6-30, 10-00 மணி விடுமுறைதினங்களில் 2-30 ஜெய்சங்கர்—ஜமுனா நடித்த குழந்தையும் தெய்வமும்

REGAL JAFFNA 4-40, 7-00 & 9-45 p.m. Robert Vaughn & David Mc Callum in M G Ms THE SPY IN THE Green HAT (adults)

MANOHARA JAFFNA Daily at 2-30, 6-30 & 9-30 p. m Pongall Release Shammi Kopoor Rajshiree in JANWAR (Hindi) (Eastmen color)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6-30, 9-30 போயாதினங்களில் 4 காட்சிகள் எம். ஜி. ஆர்-ஜெயலலிதா காவல்காரன்

"சூரியன் மார்க்"

வாசனை சந்தன வில்லைகள்

வாசனை சந்தனப்பவுடர்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தாஷ்கண்டில் லால்பகதூர் சாஸ்திரிக்கு நினைவு அஞ்சலி

தாஷ்கண்ட், ஜன 12

காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி நினைவுநாளான நேற்று அவர் உயிர் நீத்த தாஷ்கண்டில் அவரதுநினைவாக ஒருநிகழ்ச்சி நடைபெற்றது அவர் இருந்த வீட்டில் அவர் நினைவுச்சின்னம்மீது மலர் வளையம் சாத்தப்பட்டு அவருக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது



இந்திரா காந்தி நேற்றுஇங்கு காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியின் நினைவு விழாவில் கலந்து கொண்டுபேசுகையில் குறிப்பிட்டார்.

'அமைதியை நாடும்', மனிதராக லால்பகதூர்சாஸ்திரி வாழ்ந்தார். ஆனலும் அவர் நெஞ்சம் பாறையைப்போல் உறுதியானது. சமாதானத்துக்காக வேற்று நாட்டில் உயிர் நீத்த மாவீரர்'' என்று கூறிய பிரதமர் இந்திரா தாஷ்கண்ட் பிரகடனம் செயல்படுத்தாதது குறித்து குறிப்பிட்டார்.

'தாஷ்கண்ட் பிரகடனம் செயல்படுத்தாததற்கு பாரதம் மீது குற்றம்சாட்டுவதில் அர்த்தமேயில்லை. தாஷ்கண்ட் பிரகடனம் சரியாக செயல்படுத்தப்படவில்லையென்றால், அதற்குக் காரணம் மற்றத்தரப்பினரேயல்லாமல் நாமல்ல' என்றார் பிரதமர்.

விஜயகாட்டில் . . .

நேற்று புதுடில்லி விஜயகாட்டிலுள்ள காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் சமாதிக்கு திருமதி சாஸ்திரி மலர்வளையம் சாத்தினர்.



கைதரபாத்தில் . . .

'மற்ற நாடுகளுடன் அமைதியாக இருப்பதையே பாரதம் விரும்புகிறது ஆனலும் எந்த அபாயத்தையும் சமாளிப்பதற்கு பாரதம் தயாராகவே இருக்கிறது' என்று பாரதப் பிரதமர் ஸ்ரீமதி தாஷ்கண்ட் பிரகடனம் சரியாக செயல்படுத்தாததற்கு பாரதம் மீது குற்றம்சாட்டுவதில் அர்த்தமேயில்லை. தாஷ்கண்ட் பிரகடனம் சரியாக செயல்படுத்தப்படவில்லையென்றால், அதற்குக் காரணம் மற்றத்தரப்பினரேயல்லாமல் நாமல்ல' என்றார் பிரதமர்.

விஜயகாட்டில் . . .

நேற்று புதுடில்லி விஜயகாட்டிலுள்ள காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் சமாதிக்கு திருமதி சாஸ்திரி மலர்வளையம் சாத்தினர்.

கைதரபாத்தில் . . .

'மற்ற நாடுகளுடன் அமைதியாக இருப்பதையே பாரதம் விரும்புகிறது ஆனலும் எந்த அபாயத்தையும் சமாளிப்பதற்கு பாரதம் தயாராகவே இருக்கிறது' என்று பாரதப் பிரதமர் ஸ்ரீமதி

'அமைதியை நாடும்', மனிதராக லால்பகதூர்சாஸ்திரி வாழ்ந்தார். ஆனலும் அவர் நெஞ்சம் பாறையைப்போல் உறுதியானது. சமாதானத்துக்காக வேற்று நாட்டில் உயிர் நீத்த மாவீரர்'' என்று கூறிய பிரதமர் இந்திரா தாஷ்கண்ட் பிரகடனம் செயல்படுத்தாதது குறித்து குறிப்பிட்டார்.

'தாஷ்கண்ட் பிரகடனம் செயல்படுத்தாததற்கு பாரதம் மீது குற்றம்சாட்டுவதில் அர்த்தமேயில்லை. தாஷ்கண்ட் பிரகடனம் சரியாக செயல்படுத்தப்படவில்லையென்றால், அதற்குக் காரணம் மற்றத்தரப்பினரேயல்லாமல் நாமல்ல' என்றார் பிரதமர்.

விஜயகாட்டில் . . .

நேற்று புதுடில்லி விஜயகாட்டிலுள்ள காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் சமாதிக்கு திருமதி சாஸ்திரி மலர்வளையம் சாத்தினர்.

கைதரபாத்தில் . . .

'மற்ற நாடுகளுடன் அமைதியாக இருப்பதையே பாரதம் விரும்புகிறது ஆனலும் எந்த அபாயத்தையும் சமாளிப்பதற்கு பாரதம் தயாராகவே இருக்கிறது' என்று பாரதப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்று இங்கு காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியின் நினைவு விழாவில் கலந்து கொண்டுபேசுகையில் குறிப்பிட்டார்.

'அமைதியை நாடும்', மனிதராக லால்பகதூர்சாஸ்திரி வாழ்ந்தார். ஆனலும் அவர் நெஞ்சம் பாறையைப்போல் உறுதியானது. சமாதானத்துக்காக வேற்று நாட்டில் உயிர் நீத்த மாவீரர்'' என்று கூறிய பிரதமர் இந்திரா தாஷ்கண்ட் பிரகடனம் செயல்படுத்தாதது குறித்து குறிப்பிட்டார்.

'தாஷ்கண்ட் பிரகடனம் செயல்படுத்தாததற்கு பாரதம் மீது குற்றம்சாட்டுவதில் அர்த்தமேயில்லை. தாஷ்கண்ட் பிரகடனம் சரியாக செயல்படுத்தப்படவில்லையென்றால், அதற்குக் காரணம் மற்றத்தரப்பினரேயல்லாமல் நாமல்ல' என்றார் பிரதமர்.

விஜயகாட்டில் . . .

நேற்று புதுடில்லி விஜயகாட்டிலுள்ள காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரியின் சமாதிக்கு திருமதி சாஸ்திரி மலர்வளையம் சாத்தினர்.

கைதரபாத்தில் . . .

'மற்ற நாடுகளுடன் அமைதியாக இருப்பதையே பாரதம் விரும்புகிறது ஆனலும் எந்த அபாயத்தையும் சமாளிப்பதற்கு பாரதம் தயாராகவே இருக்கிறது' என்று பாரதப் பிரதமர் ஸ்ரீமதி

போர்க்கைதிகளை விடுவிக்க இஸ்ரேல்-ஐ.அ.குடியரசு இணக்கம்

ஜெனிவா, ஜன. 12

இஸ்ரேலும் ஐக்கியஅரபுக் குடியரசும் போர்க்கைதிகளை ஒரு பொது அடிப்படையில் பரிவரத்தனை செய்துகொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதை இதனை சர்வதேச பசஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

மேற்கு ஆசிய யுத்தத்தின் போது ஐக்கிய அரபுக் குடியரசு போர்வீரர்களை இஸ்ரேல் பிடித்து வைத்திருந்தனர். இதே போல் இஸ்ரேல் துருப்புக்கள் சிலரை ஐக்கிய அரபுக் குடியரசினர் பிடித்து வைத்திருந்தனர். சிறைபிடிக்கப்பட்ட இரு நாட்டுக்கைதிகளையும் ஒரு பொது அடிப்படையில் அந்த நாட்டினரிடையே ஒப்படைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வந்தன.

ஐக்கிய அரபுக் குடியரசுக் கைதிகள் 4,000பேரை இஸ்ரேல் சிறைபிடித்து வைத்துள்ளது. இஸ்ரேல் கைதிகள் 20பேரை மட்டுமே ஐக்கிய அரபுக் குடியரசினர் சிறைபிடித்து வைத்திருக்கின்றனர்.

அடுத்த சில நாட்களில் இந்தகைதிகள் பரிவர்த்தனை நடைபெறும்.

பணமோசடிவழக்கு ராதாவுக்கு தண்டனை குறைந்தது

செங்கல்பட்டு, ஜன. 12

பணமோசடி வழக்கொன்று சம்பந்தமாக தனக்கு விதிக்கப்பட்டிருந்த தண்டனையை எதிர்த்து திரைப்பட நடிகரான எம்.ஆர்.ராதா அப்பில் செய்திருந்தார். கீழ்க்கோர்ட் தண்டனையை ஊர்ஜிதப்படுத்தி செங்கல்பட்டு செசன்ஸ் நீதியரசர் ஜஞப். ஸயீத் இப்பரஹிம் தீர்ப்புக் கூறினர்.

எம்.ஆர்.ராதா நோயுற்றுள்ளதால் இதுவரை அவர் அனுபவித்த சிறைத் தண்டனைபோதும் எனக்கருதி எம்.ஆர். ராதாவின் சிறைத் தண்டனைக் காலத்தை நீதியரசர் குறைத்துள்ளார்.

திரைப்பட நடிகர் எம்.ஆர். ராதா மணப்பாக்கத்திலுள்ள தனது புதல்வர்களின் சொத்துக்களை தன்னுடையதெனக் கூறி பூந்தமல்லியைச் சேர்ந்த திரு. மதன்ராஜ் என்பவரிடம் ரூபா 1600,00வரை கடன்வாங்கி மோசடி செய்ததாக கூறப்பட்டது.

போலந்திலிருந்து வெளியேற்றம்

வார்சா, ஜன. 12

அமெரிக்க இராணுவ அதிகாரியொருவர் போலந்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். கனடா இராணுவ அதிகாரியொருவருடன் சேர்ந்து இந்த இராணுவ அதிகாரி வேவுபார்த்ததாக போலந்து அரசாங்கம் இவர் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

லண்டன் கருத்தரங்கில் ஈழத்துக்கல்வி நிபுணர்

லண்டன், ஜன. 12

யுனெஸ்கோவின் ஆதரவின் கீழ் லண்டனில் கல்வி பற்றிய கருத்தரங்கொன்று ஆரம்பமாகியது. பிரிட்டிஷ் வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் திரு. ரெக்பிரௌன் இந்த மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

'இந்த மகாநாட்டில்பங்கு பற்றும் ஒவ்வொருநாடும் கல்வி அபிவிருத்திக்கான தேவைகளை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றன. இது பொருளாதார அபிவிருத்தியுடன் தொடர்புள்ளதாக இருக்கிறது' என்று அமைச்சர் இம்மகாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் எடுத்துரைத்தார்.

'கல்வித்திட்டத்தைப் பொறுத்தவரை பிரிட்டன் ஒரு முக்கிய பங்கு வகித்து வருகிறது. சுமார் 20,000 பிரிட்டிஷ் நிபுணர்கள் தற்சமயம் வெளிநாடுகளில் தொண்டாற்றி வருகிறார்கள். இவர்களில் மூன்றிலொரு விகிதத்தினர் கல்வித்துறையில் தொண்டாற்றிவருகின்றனர்' என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஐந்துநாட்கள்வரை நடைபெறவிருக்கும் இந்தக் கருத்தரங்கில் 14 நாடுகளைச் சேர்ந்த 30 கல்வி நிபுணர்கள் பங்குபற்றி வருகிறார்கள். இலங்கைப்பிரதிநிதியாக பொது நடுத்தரக் கல்வியின் உதவி அதிபர் திரு. பி.ஜே.பி.அலஸ் பங்குபற்றுகிறார். கல்வித்திட்டங்கள் பாடவிதானங்கள், நிதிமுறைகள் பயிற்சிபற்றிய அம்சங்கள் இம்மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

'டாஸ்'ஸின் 50-வது ஆண்டு நிறைவு

மாஸ்கோ, ஜன. 12

சோவியத் செய்தி ஸ்தாபனமாகிய 'டாஸ்' தனது 50வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. இதை யொட்டி 'டாஸ்'தொழிலாளர்களும், சோவியத் பத்திரிகையாளர்களும் மாஸ்கோவில் 10-ம் திகதி கூட்டமொன்றை நிகழ்த்தினர். அக்டோபர் புரட்சிக்கு ஒருமாதத்துக்குப் பின்னர்லெனினிலுல்கைச்சாத்திடப்பட்டஆணையின் பிரகாரம், பெட்ரோகிராட் செய்தி ஸ்தாபனம் 'டாஸ்' ஸ்தாபனமாகியது. இதுவே பின்னர்'டாஸ்'செய்தி ஸ்தாபனமாகியது.

இன்று உலகச்செய்திஸ்தானமாகத்திகழும் 'டாஸ்'உலகின் பல பகுதிகளுக்கும் செய்திகளை அனுப்புவதுடன் அகிலத்தின் மூலைமுடக்குகளிலிருந்து செய்திகளைத் திரட்டுகிறது. இது அனைத்துலகிலும் 500 க்கும் அதிகமான நிருபர்களைக்கொண்டிருக்கிறது.

அமெரிக்க 3-வது இரவல் இருதயக்காரர் மரணம்

நியூயோர்க், ஜன. 12

அமெரிக்காவில் நடந்த மற்றொரு இரவல் இருதய ஆப்ரேஷனில் இரவல் இருதயம் பொருத்தப்பட்டவர் சிலமணி நேரத்தில் மரணமானர். அமெரிக்காவில் நடந்த மூன்றாவது இரவல் இருதய ஆப்ரேஷன் இது.

58 வயதான ஒய்வுபெற்ற பவர்மேன் லூயிஸ் பிளாக் என்பவருக்கு இந்த ஆப்ரேஷன் நடந்தது. இறந்த 29 வயது பெண்ணின் இருதயத்தை எடுத்து பிளாக்குக்கு பொருத்தினர்கள்.

ஆப்ரேஷன் 8 மணி20 நிமிஷ நரம் நடந்தது. புரொக்ஷினில் உள்ள மைமோனியஸ் ஆஸ்பத்திரியில் டாக்டர் அட்ரியன் கான்ட்ரோலிட்ஸ் இந்த ஆப்ரேஷனைச் செய்தார்.

உலகில் இதுவரை நடந்துள்ள 5-வது இருதய ஆப்ரேஷன் இது.

இருதயத்தைதன்கொடையாக அளித்த செல்வி ஹெலன் குரௌத் என்ற அந்தப்பெண்மூலையில் புற்று நோயினால் பாதிக்கப்பட்டிறந்தார். உடனே அவரது இருதயத்தை எடுத்துபிளாக்குக்கு அப்பெண் இருதயத்தைப் பொருத்தும் ஆப்ரேஷனை டாக்டர்கள் ஆரம்பித்தார்கள்.

பிரிட்டிஷ் நிபுணர் இலங்கை விஜயம்

லண்டன், ஜன. 12

இங்கிலாந்தில் ஹென்லி-ஒன்-தேம்ஸ் நகரிலுள்ள நிர்வாக பயிற்சிக்கல்லூரியின் அதிபரான திரு. ஜே.பி.மார்ட்டின் பேட்ஸ் அடுத்த மாதம் இலங்கைக்குவிஜயம் செய்கிறார். பெப்ரவரிமாதம் 9-ந் திகதியிலிருந்து 13-ந் திகதிவரை அவர் இலங்கையில் தங்கியிருப்பார்.

கொழும்பிலுள்ள நிர்வாக பயிற்சிப் போதனாபீடத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் அவர் நிர்வாகப் பிரச்னைகள் மற்றும் உத்தியோகத்தர் பயிற்சி சம்பந்தமாக ஆலோசனைகள் கூறுவார்.

சர்வேயர்-7

மண்ணுராய்ச்சிக் கருவி இயங்கவில்லை

நியூயோர்க் ஜன. 12

அமெரிக்கா சந்திரனுக்கு அனுப்பிய ஆளில்லாத 'சர்வேயர்-7' விண்வெளிக்கலம் தொடர்ந்து தகவல்களை அனுப்பிக்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை 2,500க்கு மேற்பட்ட சந்திரனின் மேற்பரப்பைக்கொண்ட படங்களை 'சர்வேயர்-7' அனுப்பியுள்ளது.

'சர்வேயர்-7'ல் இணைக்கப்பட்டிருந்த மண்ணுராய்ச்சிக் கருவி மட்டும் இயங்கவில்லையாம்.

சென்னை துறைமுக தொழிலாளர் வேலைநிறுத்தம்

சென்னை, ஜன. 12

சென்னைதுறைமுக தொழிலாளர்வேலைநிறுத்தம் தொடர்ந்த நடைபெறுகின்றது. கடந்த திங்கட்கிழமையிலிருந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்தவேலை நிறுத்தத்தால், தமிழ்நாட்டில் உணவுநெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

யூனிபாம் இலவசமாக வழங்கப்பட வேண்டுமெனக் கோரி 2,500 தொழிலாளர் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சர்வதேச தமிழ் ஆராய்ச்சிசங்கம் சென்னையில் கிளை

சென்னை, ஜன. 10

சர்வதேச தமிழாராய்ச்சிக் கழகத்தின் சென்னைக் கிளையொன்றை அமைக்க டாக்டர் மு. வரதராஜனர் ஒப்புக் கொண்டுள்ளதாக இன்று பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்ட கருத்தரங்கில் போது டாக்டர் தனி நாயக அடிகள் அறிவித்தார்.

சர்வதேச தமிழாராய்ச்சி சங்கத்தின் ஆதரவில்தான் 2-வது உலகத்தமிழ் மகாநாடு நடைபெறுகிறது.

சர்வதேச தமிழாராய்ச்சிக் கழகத்தின் காரியதரிசி ஜெனரலாக கேரள பல்கலைகழகமொழி ஆராய்ச்சித் துறைத் தலைவர் பேராசிரியர் வி. க. சுப்பிரமணியம் சேருவதாகவும் அவர் தெரிவித்தார். மொழி ஆராய்ச்சி குறிப்பாக திராவிடமொழி ஆராய்ச்சிக்காக தமது வாழ்நாள் முழுவதும்பாடுபட்டு வரும் பேராசிரியர் எம். பி. எமனேவின் 60 ஆண்டு நிறைவுவிழாவைகொட்டி அவரைக் கௌரவித்து தயாரிக்கப்பட்டுள்ள மலர், மகாநாட்டில் வெளியிடப்பட்டது.

தைப்பூசம் மாசி மகம் பங்குனி உத்தரம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை சைவாலுட்டான பாதுகாப்புச் சபையின் நிர்வாகக் குழு அ. இ. வேதாகம சைவசித்தாந்த சபை நிர்வாகக்குழுவுடனும், அ. இ. சைவாலய தர்மகர்த்தாக்களின் நிர்வாகசபைக் குழுவுடனும் சேர்ந்து நிகழ்த்திய ஆலோசனைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

எதிர்வரும் தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம் ஆகிய தினங்களை நிர்ணயிக்கும்பொழுது இந்தியாவில் இத்தினங்களுக்கு முக்கியத்துவம் பெற்ற தலங்களாகிய சிதம்பரம், கும்பகோணம் ஆகிய தலங்கள் கைக்கொள்ளும் தினத்தை முறையே அனுசரித்து வேதாகமவிரோதமில்லாதவகையில் அத்தினங்கள் நிர்ணயிக்கப்படவேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டதினங்களை நமதுசைவாலயங்கள் அனைத்தும்தம்மூட்பேதமின்றி ஒருமுகமாக அனுசரித்து ஒழுகவேண்டுமென்றும் இச்சபை தீர்மானித்திருக்கின்றது.

இதற்கிணங்க இவ்வருடத்திவ் இத்தினங்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதிகள் வருமாறு:

தைப்பூசம்— தைமாதம் 29 [12-2-68] மாசிமகம் மாசிமகப் — மாசிமாதம் 30 [13-3-68] பங்குனி உத்தரம் பங்குனிமாதம் 29 (11-4-68.)

சாம்பியன்கள் தெரிவு

பண்டத்தரிப்பு, சனி

வலிமேற்கு விளையாட்டுப் பிரிவு ஆகரவில் இளவாலை கென்றிஸ் விளையாட்டு மைதானத்தில்நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி முடிவுறும் கட்டத்தை அடைந்துள்ளது.

'அ' பிரிவுச் சம்பியன்களாக இளவாலை ஆன்ஸ் விளையாட்டுக் கழகமும், 'பி' பிரிவுச் சம்பியனகளாக சுதுமலை நாவலர் விளையாட்டுக்கழகமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல்

தைப்பெங்கல் பண்டிகையை முன்னிட்டு (15-1-68) திங்கட்கிழமை 'ஈழநாடு' காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் (16-1-68) செவ்வாய்க்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவராமாட்டாது.

மணிவாக்கு

எமது வாழ்க்கை தாமரை மலரைப் போல ஒளியை நோக்கி மேலே சென்று கொண்டே இருக்க வேண்டும். எமது உள்ளம் உயர்ந்ததையே நாட வேண்டும். ஒளியிலேயே நாம் மகிழ வேண்டும். அப்போதுதான் எமது வாழ்க்கையும் தாமரையைப் போல இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்கத் தகுதியுடையதாகும்.

— சுவாமி சிதானந்தர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் திலவங்கஞ மார்கழி மீ 29வ (13-1-68)

பாடசாலை புனரமைப்பு

கல்வி அமைச்சரின் பாடசாலைப் புனரமைப்புத் திட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த இதர மாகாணங்களிலுள்ள, தமிழ்ப் பாடசாலைகளையும், தமிழ் மூலம் கல்வி போதனை அளிக்கும் வகுப்புக்களையும் மூடிவிடுவதற்கு வழி வகுத்திருக்கிறதாம். இது பற்றிக் கல்வி அமைச்சருக்கு தமிழரசுக் கட்சி ஆட்சேபம் தெரிவித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

கல்வி அமைச்சரின் பாடசாலைப் புனரமைப்புத் திட்டம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர இதர மாகாணங்களிலுள்ள தமிழ்ப்பிள்ளைகளுக்கு தாய்மொழிக் கல்வி மட்டுமல்லாது தமிழில் பாடபோதனை கூட இருக்க வாய்ப்புக் கிடைக்காது போய்விடும். என்று முன்னரேயே சில பகுதிகளிலிருந்து குரல் எழுந்தது. கல்வி அமைச்சரின் புதிய புனரமைப்புத் திட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னர் சில வருடங்களுக்கு முன்பாகவே தென்னிலங்கையில் பல தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டு வந்ததும் இந்த ஆபத்தான நிலைமையைத் தடுப்பதற்காக கொழும்பில் தமிழ்ப் பெற்றோர் கூடி ஒரு சபையை நிறுவியதும் தெரிந்ததே. கொழும்பில் வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தாய்மொழிக் கல்வி கிடைக்க வசதி செய்ய வேண்டுமென்றும் குறிப்பாக கொழும்பிலுள்ள தமிழ்ப் பெண் பிள்ளைகள் தாய்மொழியில் கல்வி போதனை பெற வசதி செய்ய வேண்டுமென்றும் பார்லிமென்டில் தமிழ்ப் பிரதிநிதிகள் சிலர் கோரியிருந்தனர். பெற்றோர் விரும்பிய மொழி போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் திட்டமிட்ட போது இத் திட்டம் இரண்டு மாகாணங்களைத் தவிர்ந்த இதர பகுதிகளிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளை, தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் மறக்கச் செய்யும் ஒரு பெரிய ஆபத்தான திட்டம் என தமிழ்ப் பெற்றோரும் மற்றோரும் ஒரே குரலில் எதிர்த்துநின்றனர். இந்த எதிர்ப்பு வெற்றியீட்டித் தரத் தவறவில்லை என்று சொல்லலாம்.

ஒரு பிள்ளைக்கு அதன் தாய்மொழியிலேயே கல்விப் போதனையளிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படை உரிமையைக் கல்வி அமைச்சரும் தேசிய அரசாங்கமும் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதன்பின்னரும் தென்னிலங்கையிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளையும், இதர கல்லூரிகளிலுள்ள தமிழ்ப் பிரிவுகளையும் மூடுவதற்கு என்ன காரணம்? இதுதானா பாடசாலைப் புனரமைப்புத் திட்டம். புனரமைப்பு என்பது சீர்குலைந்திருப்பதை சீர் செய்வது. சீராக இருப்பதை சீர்குலைப்பது புனரமைப்பு அல்ல.

கல்வி அமைச்சர் கவனிக்காதுவிடாலும் பிரதமராவது இதைக் கவனிக்க வேண்டும்.

இலவச உரம்

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கவேண்டுமென கோரும் தனியார் பிரேரணையொன்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டு தோல்வியடைந்திருக்கிறது. எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு நீல்டி. அல்விஸ் இப் பிரேரணையைக் கொண்டுவந்திருந்தார். பிரேரணையில் தெளிவில்லையென்றும் தோட்ட முதலாளிகளுக்கும் இலவச உரம் வழங்கவேண்டுமெனப் பிரேரணை குறிப்பிடுவதாகவும் உணவு-விவசாய அமைச்சர்விவாதத்திற்குப் பதிலளிக்கை

சாங்கத்தின் நிதி நிலைமை சிரானதும் உரப்பசளை இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் உணவு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

உணவு உற்பத்தி அதிகரிப்பு இயக்கத்துக்குப் பொதுமக்கள் மத்தியிலும் விவசாயிகள் மத்தியிலும் ஆதரவும் உற்சாகமும் ஏற்பட்டிருப்பதும் உற்பத்தி அதிகரித்திருப்பதும் உண்மையே. ஆயினும் வெறும் பிரசாரமும் பாராட்டும் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்துவிடாது. உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நல்லரசகியமோ அதைவிட நல்ல உரமும் அவசியம். இப் பொழுதும் நமக்குத் தேவையான நவீன, ரசாயன உரத்திற்கு வெளி நாடுகளையே நம்பியிருக்கிறோம். வவுனியாவில் ரசாயன உரத்தொழிற்சாலை அமைக்கப்படுமென சில மாதங்களுக்குமுன்னர் ஓர்அமைச்சர் தெரிவித்திருந்தார். பின்னர் அதுபற்றி தகவல் எதுவுமே வெளிவரவில்லை. ரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றல்ல அதற்குமேலும் இங்கு அமைக்கப்பட்டால் நற்பயன் கிடைக்காமல் போகாது.

இதுதவிர மழை, வெள்ளம், வரட்சி போன்ற இயற்கைக் கோளாறுகளால பயிர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதற்கு விவசாயிகளுக்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியம். யாழ்ப்பாணமாவட்டத்தில் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுச் செய்கை சமீபகாலமாக வெள்ளத்தினால் பெரிதும் சேதமடைந்து விவசாயிகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். இவர்களுக்கு எந்த அளவில் நிவாரண உதவி அளித்து அவர்களின் முயற்சிக்கு அரசாங்கம் ஊக்கமளித்திருக்கிறது? அழுகிப் போன கிழங்குகளுக்கு பதிலாக கிழங்குகூடக் கிடைக்கவில்லையே!

1,900 பேருக்கு மலேரியா

தடுப்பு இயக்கம்

தீவிரமாக நடக்கிறது

கொட்டாஞ்சேனை, வெள்ளி

மத்திய, வடமத்திய, வடமேற்கு, சபரகமுவை மாகாணங்களின் பல்வேறு இடங்களிலும் சுமார் 1,900 பேர் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நோய் தோன்றுவதற்கு பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. எலஹெராவில் இரத்தினக்கல்கண்டு பிடிக்கப்பட்டமையால் இதர பிரதேசங்களிலிருந்து மக்கள் அங்கு செல்வதே இவற்றுள் பிரதான காரணமாக கூறப்படுகின்றது. இப்பிரதேசத்தில் தோண்டப்பட்டுள்ள சுமார் ஒரு லட்ச இரத்தினக்கல் அகழிகள் மலேரியா நுளம்பு பெருகுவதற்குத் தகுந்த ஆதாரங்களாக விளங்குகின்றன.

மக்கள் வசிக்கக்கூடியதாக மருந்து தெளித்தற்குத்தக்க நடவடிக்கைகளை எடுக்கப்படுமுன் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதும் பிறதொரு காரணமாகும்.

உணவு உற்பத்திக்குப் பரந்த நிலப்பரப்புகள் காடழிக்கப்பட்ட வரட்சி மண்டலத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளும் பொது அபிவிருத்தித் திட்டங்களும் அதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ளமையினால், இப் பிரதேசங்களுள் மக்கள் வருதலும் பெயர்தலும் இதற்கான இன்னுமொரு காரணமாக இருக்கலாம்.

எனவே இரத்தினக்கல் அகழ்ந்தெடுக்கும் பிரதேசங்கள், புதிய குடியேற்றப் பிரதேசங்கள், அநுராதபுரம், குருநாகல், பொலன்னறுவை மாத்தளை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள சேனைகள், கிராமங்கள் ஆகிய பிரதேசங்களில் இந்நோய் பரவியுள்ளதென்று கூறலாம்.

நோய்கண்ட பிரதேசங்களுக்கு விஜயஞ்செய்த மக்களால் இதரபிரதேசங்களுக்கு இந்நோய் கொண்டு செல்லப்பட்டுள்ளதாம்.

தடுப்பு நடவடிக்கை

இந்நோயைக் கட்டுப்படுத்த மலேரியா ஒழிப்பு இயக்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மேலதிகமாக ஏழு புதிய மலேரியா ஒழிப்புக்கூறுகளை அது ஸ்தாபித்துள்ளதோடு, ஏற்கனவேயுள்ள கூறுகளை நோய்கண்ட பிரதேசங்களில் மருந்து தெளிக்கும் வேலையில் ஈடுபடுத்தியுள்ளது. மேலும் அது இப்பிரதேசங்களிலுள்ள தனது நோய் தடுப்பு உத்தியோகத்தர்களை, பரிசோதனை மேற்கொள்ளல், நோய்கண்டவர்களுக்கு சிகிச்சை அளித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுத்தியுள்ளது.

மேலும் 27 மருந்துதெளிக்கும் கூறுகள் ஸ்தாபிக்கப்பட்டதைக்கொண்டு வரட்சி மண்டலத்திலுள்ள மேலும் 10 லட்ச மக்களுக்குப் பாதுகாப்பளிக்க மருந்து தெளிக்கும் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பிலும், அநுராதபுரத்திலுமுள்ள மக்களின் இரத்த பரிசோதனை அலுவல்களை அதிகரிப்பதற்காக அவ்விடங்களில் இரண்டு பிராந்திய ஆய்வுகூடங்களை நிறுவவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. எலஹெர பிரதேசத்திலுள்ள ஒரு லட்சம் இரத்தினக்கல் அகழிகளை நிரப்புவதற்கு உதவிபுரியுமாறு இராணுவம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றைய பலன்

[13-1-68]

சனிக்கிழமை

மார்கழி மீ 29 வ

நட்சத்திரம்- மிருகசீரிடம் இரவு 11 52 மேல் திருவாதிரை.

திதி- திரயோதசி இரவு 8-56 மேல் சதுர்த்தசி.

சுபநேரம்- 3-33 - 5-03

ராகுகாலம்- 9-33-11-03

மேஷம் - நல்லசெய்தி ஆதரவு பெருகும்.

ரிஷிபம் - காதலில் மோதல், கண்ணீரில் காணிக்கை.

மிதுனம்-மின்னுவதெல்லாம் பொன்னல்ல, நிதானம் நன்று.

கடகம் - தேன்சிந்தும் பேச்சு, தேடியது கிடைக்கும்.

சிம்மம் - உள்வீட்டில் பூசல், உபத்திரவ மிகுதி.

கன்னி - அன்னமெழி அமிர்தம், அமைதியுடன் இரு.

துலாம்-விருந்தாளி வருவர், வேடிக்கை நடக்கும்

விருச்சிகம்-வேவுக்காரர் தொடுப்பர், விழிப்புடன் இரு.

தனுசு -வியாபாரமொழி பேசி வியாபாரம் நன்று.

மகரம் - தோழர்கள் தொல்லை, கடன்பட நேரிடும்.

கும்பம்-பெரியோர் ஆசி பெறுமதிப்பு

மீனம் - தொழில் பெருமை சன்மானமுண்டு

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

இருபத்தேழு நட்சத்திரங்களுள் திருவாதிரையும் திருவோணமுமே 'திரு'என்னும் அடைமொழிபெற்றுச் சிறப்புப் பெற்றவையாகும். 'ஆதிரை நாதன்' என்பது சிவனின் பெயர்களுள் ஒன்றாகலான் திருவாதிரை சிவசம்பந்தமுடையது. மணிவாசகர் அருளிய திருவெம்பாவையைத் திருவாதிரைத் திருநாளில் சைவநன்மக்கள் பாடிப்பரவுகின்றனர்.

திருமைலாப்பூரில் சிவநேசரின் மகளாகப் பிறந்து, நந்தவனத்தில் பூக்கொய்யும் போது பாம்பினால் தீண்டப் பெற்று இறந்து, என்பு வடிவில் குடத்துள் இருந்த பூம்பாவையை அழைக்கும் போதுகூடத் திருஞானசம்பந்தப்பெருமான் திருவாதிரைப் திருவிழாவைக் காண்பதுதான் மனிதப்பிறவியின் நோக்கம் எனக்குறிப்பிடுகிறார்.

அப்பர் சுவாமிகளும் திருவாரூர் திருவாதிரைச் சிறபபை, 'அன்பனூர் ஆதிரை நாளா லதுவண்ணம்' என்ற திருப்பதிக அடிமூலம் வற்புறுத்தியுள்ளார்.

இறைவன் உயிர்களுக்குத் தனு கரண புவன போகங்களை மாயையில் ஒடுங்கச் செய்து மீளத் தோற்றுவித்தல் என்பதே 'மார்கழி' என்பதன் பொருளாகும். 'ஆதிரை'என்பதன் பொருள் உயிர்களை உலகவாழ்வில் அழுந்தச்செய்தல் என்பதாகும். ஆன்மாக்கள் மலஇருளில் கிடந்து துஞ்சாமல் பரிபாகம் பெறும்பொருட்டுத் திருவருள் வெள்ளத்திலே அழுந்தி முழுகுமாறு எழுப்புவதே இத்திருவெம்பாவையின் உட்கிடையாம்.

திருவாதிரை நாளில் சிவபெருமான் திருநடனம் புரிந்தருளியதாக புராணங்கள் கூறுகின்றன. இந்நாளில் சிவாலயங்களில் விசேட அபிஷேகங்களும் பூஜைகளும் நடைபெறுகின்றன. திருவாதிரைத் திருவிழாவில் கலந்து கொண்டு நடராசப்பெருமானின் திருவருளைப்பெற்று பெரும்பேறெய்துகின்றனர். திண்ணபுரம் எனப்படும் இத்தலத்தின் பழமையும் பெருமையும் புலவர் பலர் பாடிய பிரபந்தங்கள்மூலம்

ஈழத்து சிதம்பரம் திருவாதிரை

— வித்துவான் க. நவசோதி —

தில்லைதெரிசிக்க முத்தி கொடுப்பது. இது யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடியது கண்ணுல்கண்டமாத்திரத்தில் முத்தி சித்திப்பது எளிதல்லவா? ஆதலின் சிதம்பரத்தைச் சென்றெருகால் கும்பிட்டாலும் எல்லையில்லா ஆனந்தம் எல்லோர்க்கும் கிடைக்குமென்பது உறுதி. தில்லையிலே எழுந்தருளியுள்ள ஆனந்த நடராசருடைய குஞ்சிதபாதத்தைக் கும்பிட்டிருத்தலே பெருந்தவமாகும். திருநாவுக்கரசரும் 'மனிதப்பிறவியின் நோக்கம் இனித்தமுடைய எடுத்த பொற்பாதத்தைக் காணுதலே'—என்று குறிப்பிட்டுள்ளார்.

சைவ உலகத்தின் உயிர் நிலையாக விளங்கும் சிதம்பரத்தில் ஆர்த்திரா தரிசனஞ் செய்தல் பெரும்பேறாகும். அனுல் இந்நாட்களில் இலங்கையில் இருந்து அங்குசெல்வது எளிதான காரியமன்று. எனவேதான் இலங்கைவாழ் சைவமக்கள் 'ஈழத்துச்சிதம்பரம்' என்று போற்றப்படும் காரைநகரச் சிவாலயத்தில் நடைபெறும் திருவாதிரைத் திருவிழாவில் கலந்து கொண்டு நடராசப்பெருமானின் திருவருளைப்பெற்று பெரும்பேறெய்துகின்றனர். திண்ணபுரம் எனப்படும் இத்தலத்தின் பழமையும் பெருமையும் புலவர் பலர் பாடிய பிரபந்தங்கள்மூலம்

"கல்நெஞ்சைக் கரைத்த

கடவுளடியைக் காண

தெய்வீகத் திருவா

மணிவாசகர் விழாவில் பொ

யாழ்ப்பாணம், சனி

"செந்தமிழுக்கு இனிமை ஊட்டும் நூல்களிற் சிறப்புடையதாகவும் —மன்னதாகவும் மிளிர்வது திருவாசகம். கல்நெஞ்சைக் கரைத்து கடவுளடியைக் காணச் செய்வதும் இதுவே. திருவாசகத்துக்குருகாதார் மற்றெருவாசகத்துக்குரு கார் என்ற சிரிய மொழி திருவாசகத்தின் தெய்வீகப் பணியை உற்றுணர்ந்த ஒண்தமிழ்வல்லாரால் ஓதப்பட்டதாகும். பசும்புல்லின்மீதுள்ள பனித்துளி கதிரவன் ஒளிபெற்றுப் பிரகாசித்து கதிரவனின் ஆகர்ஷசக்தியால் அவனுடன் ஐக்கியமாவதுபோல் இறைவனின் அன்பிலே திளைத்து நின்ற மணிவாசகர் இறைவனுடன் ஐக்கியப்பட்டதை திருவாசகம் உணர்த்துகின்றது."

இவ்வாறு வியாழக்கிழமை மாலை காரைநகர் சிவன் கோவிலில் நடைபெற்ற மணிவாசகர் விழாவின் இரண்டாம்நாளின்போது செந்தமிழ்மணி பொ. கிருஷ்ணபிள்ளை உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது;—

மனத்துக்கெட்டாதஇறைவனை இழுத்துவருவது திருவாசகம். மேருவை வளைத்து முப்புரம் எரித்த முன்னவனை நெருங்கிய மணிவாசகர் அன்பிலே கனிந்துநின்றவர். அவரியற்றிய திருக்கோவையார், திருவாசகம் ஆகிய இரண்டையும் படிக்கும்போது பக்திக் கடலில் ஆழ்ந்து விடுகிறோம். மருந்தும் மந்திரமுமாய் உள்ள சிவனை அடையச்செய்தசாதனமாக மணிவாசகரின் வாக்குகள் அமைந்துள்ளன. மக்களின் நெஞ்சங்களை உருக்கி மலக்கட்டை அறுத்தெறிந்து சீரிய பேரின்பப் படிக்கட்டாக மிளிர்கின்ற மணிவாசகர் வாசகம் தமிழ் உபநிடதமாகும். உபநிடதம் எனும்போது ஞானக்குருப்பொருளென்ற அர்த்தபாகும். ஞானக்குருப்பொருளை நண்ணுவதற்கு மணிவாசகம் என்ற மருந்தே ஒரு தனிப்பாதையுமாகும்.

அடுத்துப் பேசிய தருமையாதீன வித்துவான் சிங்காரவேலன் குறிப்பிட்டவை வருமாறு:—

எல்லாரும் மனிதரா?

உறுப்புக்கள்எல்லாம்ஒருவருக்குப்போல் மற்றவருக்கும் அமைந்திருந்தால் எல்லோருமே மனிதர்கள் என்றிலக்கணத்துக் குட்பட்டவராகமாட்டார். மனிதனுக்குரிய பண்பே மனிதனைச் சிறப்பிப்பது. மனிதன் என்ற பிண்டத்துள் கருத்துடைப் பொருள் இருக்கவேண்டும். அது இல்லையாஞல் அது வெறும் பிண்டமாகும்.

அதுபோலத்தான் பாடல்கள் அன்றுதொடங்கிஇன்றுவரை எத்தனையோ பாடல்கள் அவ்வப்போது காணப்பட்டுள்ளன. பலவேறுபட்ட கவிஞர்கள் காலந்தோறும் பாக்களைப் பாடுகின்றார்கள். ஆனல் எவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...சிதம்பரத்தில் ...நுவாதிரைத் திருவிழா

...வித்துவான் மு. சபாரத்தினம் —

...க்கக்கூடி...ண்டமாத்...சித்திப்பது...லின் சிதம்...ருருகால்...எல் லே...எல்லோர்க்...துமென்பது...ல எழுந்த...த நடராச...ாதத்தைக்...ல பெருந்...நாவுக்கரச...ப்பிறவியின்...ந்தமுடைய...ாதத்தைக்...ன்று குறிப்...

...தின் உயிர்...ம் சிதம்ப...ா தரிசனஞ்...ம்பேருகும்...களில் இலங்...அங்குசெல்...ாரியமன்று...லங்கைவாழ்...த்துச்சிதம்...ாற்றப்படும்...வாலயத்தில்...ருவாதிரைத்...கலந்து...ராசப்பெரு...ஞ்சப்பெற்று...துகின்றனர்...எனப்படும்...பழமையும்...புலவர் பலர்...தங்கள்மூலம்...புலுகின்றன. இத்தலத்தில் உள்ள திருவுருவங்களில் பெரும்பாலனவை அம்பலவி முருகர் என்னும் பெருந்தகையின் விடாமுயற்சியால் சிதரம்பரத்திலேயே வார்க்கப்பட்டன. நடராச மூர்த்தியை நேரில் தரிசித்த இந்திய சைவப்பேரறிஞர்களான பாஸ்கரத்தொண்டமான், வச்சிரவேலு முதலியார், கிருபானந்தவாரியார் போன்றவர்கள் திருவுருவ அமைப்பு முறையையும், சிறப்பையும் போற்றிப்புகழ்ந்துள்ளார்கள்.

சிதம்பரத்தைப் பின்பற்றி இவ்வாண்டிலும் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரைத் திருவிழா 5-1-68 வெள்ளியன்று ஆரம்பிக்கப்பட்டு 14-1-68 ஞாயிறு முடிவடைகிறது. 13-1-68 சனிக்கிழமை நண்பகலில் இரதோற்சவமும், இரவு 2 மணிக்கு மேல் நடேசர் ஆருத்திரா அபிசேகமும், விடிவதற்கு முன்னர், ஆருத்திரா தரிசனமும் மறுநாள் மாலையில் திருவூடலும் நடைபெறும். இத்தலத்தில் திருவாதிரைத் திருவிழா நடைபெறும் பத்து நாட்களிலும் இலங்கையின் பல்வேறு இடங்களிலுமிருந்து சைவ அடியார்கள் வந்துகூடிக்கூத்தப்பிரானின் திருவருளைப் பருகித் தினைப்பார்கள். அடியார்

...யார்களில் ஆண்களுக்கு வேண்டிய உணவு முதலிய வசதிகளை மாணிக்கவாசகர் மடாலயத்தினரும், பெண்களுக்குப் பிரரகியேகமானவகையில்சிவாச்சிரமமும் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கவைகளாகும். இறுதி மூன்று நாட்களிலும் உயிர்க்குறுதிபயக்கும் உபந்நியாசங்களை நிகழ்த்தும் பெரும் பணியில் மணிவாசகர்சபையினர் பல்லாண்டுகளாக ஈடுபட்டுவருகின்றனர். இத்தகைய புண்ணிய பணிகள் மேன்மேலும் சிறப்படைய ஈழத்துச் சிதம்பரேசரின் திருவருள் துணைபுரிவதாக.

வான்கலந்தமாணிக்கவாசகனின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
சேமுங்கனித் தீஞ்சுவை
கலந்துதென்
ஊன்கலந்து உயிர்கலந்து
வட்டாமலினிப்பதுவே

பருத்தித்துறை மதுவரி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. டி. ஜே என். செல்வத்துரை யாழ்ப்பாணம் மதுவரி அதிகாரியாக இம்மாதம்முதல் இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு திரு. எஸ். டபிள்யு. ஸ்ரோங் நியமிக்கப்பட்டுள்ளார். [ந. நி.]

கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை

சுடலைமடத்தில்

யாழ்ப்பாணம்- சனி சுமார் 6 மாத காலமாக பாரிசவாதத்தினால் துன்பமும் கஷ்டமும் அனுபவித்து வந்த முதியவரொருவர் ஒரு சுடலைமடத்தில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்ட பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் கொக்குவில் கிழக்கில் நடைபெற்றது.

கொக்குவில் கிழக்கிலுள்ள சுடலைமடத்தில் கழுத்தில் துணியினால் சுருக்கிட்டு இறந்துகிடக்கக் காணப்பட்ட இந்தவயோதிபர் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த பூதன் (60 வயது) என்பவரே என்று மரணவிசாரணையின்போது தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரண விசாரணை நடாத்தினர். மரணவிசாரணையின் போது இறந்தவரின் சகோதரர்களான செல்லத்துரை வீரமுத்து ஆகியோரும்மனோவியான பாறியும் சாட்சியமளித்தனர்.

இறந்தவருக்கு இருபிள்ளைகள் இருக்கிறார்களென்றும் குடும்பத் தகராறு காரணமாக 10 வருடங்கள் மக்களை விட்டுப் பிரிந்திருந்தாரென்றும், சாட்சியத்தின்போது தெரியவந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். [வி.நி.]

சனசமூக நிலைய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி மட்டுவில் வடக்கு, மாணவகன மோகனதாஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சனசமூக நிலைய மண்டபத்தில் தலைவர் வே. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி சண்முகம். காரியதரிசி திரு வே. ஜேசுதாசன், தஞ்திகாரி, திரு. க. பொன்னுத்துரை நூல் நிலையக் காரியதரிசி திரு. க. முருகேசு, கலைக்கழகக் காரியதரிசி திரு சி. செல்வராசா, விளையாட்டுப் பகுதிக் காரியதரிசி திரு. சிரகுநாதன், கணக்குப் பரிசோதகர் திரு. இ. டேவிட். மற்றும் 12 பேர்கொண்ட செயற்குழு உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர். [நி]

நிவாரணம் வழங்கப்பட்டது

கோப்பாய், வெள்ளி கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் வெள்ள அகதிகளான375 குடும்பங்களுக்கென சுமார் 15,000 ரூபா நிவாரணப்பணமாக வழங்கப்பட்டது. வலி-கிழக்கு காரியாதிகாரி கந்தோரில் இந்த நிவாரண உதவி வழங்கப்பட்டது.

மனமுடைந்து தற்கொலை

யாழ்ப்பாணம், சனி நான் கிருமிநாசினி குடித்தது பற்றி என் ஆருயிர் மனைவிக்கும், என் அன்புப் பிள்ளைச் செல்வங்களுக்கும் அறிவித்து விடுங்கள் என்று தன்நண்பர்களுக்குக் கூறிவிட்டுஒருவர் தனது உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

புத்தளத்தில்தனது மனைவி மக்களுடன் குடியிருப்பவரான கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா கனகலிங்கம் என்பரே தற்கொலை செய்துகொண்டவராவர். மரண விசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் மரணவிசாரணைநடத்தினர். இறந்தவரை ஆஸ்பத்திரியில்அனுமதித்த அவரது நண்பர்களான எஸ். நாகலிங்கம் எஸ். நடராசா ஆகியோர் சாட்சியமளித்தனர்.

இறந்தவர் புத்தளத்தில் ஒரு மில்லில் வேலைசெய்பவர் என்றும் அங்கிருந்து பொருட்கள் ஏற்றிவந்த லொறியில் இங்கு வந்து சேர்ந்தாரெனவும் வாழ்க்கையில் வெறுப்படைந்து காணப்பட்ட அவர் தான் நஞ்சுத்திரவகம் அருந்தி இறந்து விடப்போவதாக தன் நண்பர் ஒருவரிடம் தெரிவித்தாரெனவும்மரணவிசாரணையின் போதுதெரியவந்தது. தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (வி.நி)

மணிவாசகர்விழா இன்றைய நிகழ்ச்சிகள்

காரைநகர், சனி காரைநகர் சிவன்கோவில் வசந்தமண்டபத்தில் திரு. செ. இராசையா தலைமையில் இன்று மாலை நடைபெறும் மணிவாசகர் விழா நிகழ்ச்சிகள்;-

6-00— திருவாசகத் திருமுறை ஓதல், 9-30— தலைமைப் பேருரை. 9-45 'வித்தகனார் விளையாடல்' செஞ்சொற்கொண்டல் வித்துவான் சொ. சிங்காரவேலன் 10-45 — சங்கீதக் கச்சேரி சங்கீதபூஷணம் புஷ்பரத்தினம் குழுவினர். நடேசர் ஆருத்திரா அபிஷேகம் இரண்டு மணிக்கு ஆரம்பமாகும்.

'உரம்' இல்லாது கஷ்டம்

புலோலி வெள்ளி வடமராட்சிப் பகுதியில் உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் உணவு தானியத்திற்கு வேண்டிய உரம் எடுக்க இயலாது பெரும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

மேற்படி உரம் இல்லாதால் தானியவகைகள் பழுதடைந்து போகிறதாகவும் புகார் கூறுகிறார்கள். இவ்விடயம் பற்றி உணவு உற்பத்தியில் ஈடுபடிருக்கும் ஓர் தூதுகோஷ்டியொன்று தங்களுக்கு தேவையான உரம்வரவழைத்து தருமாறு உடுப்பிட்டி பாராளுமன்ற எம். பி. திரு. சிவசிதரமபரத்தை கேட்க விருப்பதாக அறியப்படுகிறது.

பண்டகசாலையில் திருட்டு

திருகோணமலை, வெள்ளி திருக்கோணமலை அபயபுரா என்னும் இடத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச்சங்கப் பண்டகசாலையிலிருந்து 250 ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுள்ள செத்தல் மிளகாய், சீனி, போன்ற உணவுப் பொருட்கள் களவாடப் பட்டிருக்கின்றது. பொலிஸார் புலன் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

நாடும் நடப்பும்

"தம்பி, என்னை எட்டியாந்தோட்டைக்கு மாற்றியிருக்காங்க. போய்ப் பாரமெடுத்திட்டு, குடும்ப விஷயத்தைக் கவனிக்கிறதுக்கும் மார்கழி பஜனை பூர்த்தி விழாவுக்குமாக ஐந்து நாள் லீவில் வந்திருக்கிறேன்."

கதாப்பிரசங்கம் செய்யும் பாணியில் கொஞ்சம்கூட சலிப்பில்லாமல் உற்சாகமாகக் கூறினார்.

இடமாற்றம் என்றாலே முகத்தைத் தொங்கப் போடுபவர்களும் இருக்கிறார்கள். உற்சாகமாக, சந்தோஷமாக அதை வரவேற்பவர்களும் இருக்கிறார்களென்பதற்கு ஆசிரியர் திருப்பூங்குடி வி. கே. ஆறுமுகம் உதாரணம்.

எட்டியாந் தோட்டை புனித மேரி தமிழ்வித்தியாலயத்தில் இனி அவர் ஆசிரியப் பணிபுரியவிருக்கிறார்.

கதாப்பிரசங்கம், விஷ்ணுப் பாட்டு, சொற்பொழிவு, பஜனை, கூட்டுப் பிரார்த்தனை இவையெல்லாம் ஒருருவாய் அமைந்தவர் ஆறுமுகம் ஆசிரியர்.

யாழ்ப்பாணத்தில் பத்தரை வருடங்கள் ஆசிரியராகப் பணிபுரிந்தாலும் கோவில்களிலும் பொது நிழ்ச்சிகளிலும் அவரது குரல் ஒலிக்கும். மாலிகழி மாதத்தில் அதி காலையில் வண்ணார்பண்ணை வீதிகளில் சிறுவர்களுடன் அவரது பஜனை. யாழ்ப்பாண நகருக்கு அவர் செல்வது நஷ்டம்தான். ஆனாலும் எட்டியாந்தோட்டைக்குச் செல்வதால் மலையகத்துக்கு அவரது சேவை கிடைக்கும். மலையக மக்கள் பயன்பெறுவர் என்று நிச்சயமாக நம்பலாம்.

ஃ ஃ ஃ

இருதயத்தை மாற்றிப் பொருத்தும் சத்திரசிகிச்சையில் தென்னைபிரிக்க டாக்டர்கள் சாதனை நிகழ்த்தி பேரும் புகழும் தட்டிக் கொண்டனர். எதிலும்நாங்கள்தான் சூரர், எங்களைவிட இந்த உலகில் எவரும் எந்த சாதனையையும் நிகழ்த்த முடியாது என்பது அமெரிக்கருக்கும் ரஷ்யருக்குமுள்ள கலக்கனம்.

இருதயமாற்ற சத்திர சிகிச்சை காலத்துக்கு முந்திய அவசரப்பட்ட செயல் என்று ரஷ்ய டாக்டர் ஒருவர் சொன்னார். அமெரிக்கர் என்ன சொல்கிறார்கள் தெரியுமா?

"ஒரு மனிதனுடைய இருதயத்தை மாற்றிவிட்டு வேறோர் மனிதனுடையஇருதயத்தைப் பொருத்திவைக்கும் அரிய முறை இப்பொழுது நடைமுறைக்கு வந்துவிட்டது. இத்துறை இன்று புதுமையாகத் தோன்றிய போதிலும் இதற்கான வித்தை பல ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்ட முறையை அனுசரித்தே இன்று இத்தகைய சத்திர சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

தென் ஆபிரிக்காவிலுள்ள கேப்டவுணைச் சேர்ந்த வரான டாக்டர் கிறிஸ்டியன் போர்னெட் அவர்களும், கலிபோர்னியாவில் சில நாட்களுக்கு முன்னர் இருதய மாற்ற அறுவை சிகிச்சையளித்த டாக்டர் நோர்மன் எடவர்டு ஷம்பே அவர்களும் இருதய சம்பந்தமான ரணசிகிச்சைகளைச் செய்யும் முறைகளை அமெரிக்காவிலேயே பயின்றனர். மினசோட்டா பல்கலைக்கழகத்தில் இவ்விரு டாக்டர்களும் 1950ம் ஆண்டின் இடைக்காலத்தில் பயிற்சி பெற்றனர்."

(8-ம் பக்கபார்க்க)

...க் கரைத்து

...கணை செய்வது ...திருவாசகம்"

...பொ. கிருஷ்ணபிள்ளை

...மாய் உள்ள...ச்செய்தசாத...ாசகரின் வாக்...ுள்ளன. மக்...க்களை உருக்கி அறுத்தெறி...ன்னப் படிக்...ர்கின்ற மணி...ம் தமிழ் உப...உபநிடதம்...க்கருப்பொரு...ர்த்தபாகும்...பாருளே நண்...மணிவாசகம்...ஒரு தனிப்...ம்.

...பசிய தருமை...வான் சிங்கார...றிப்பிட்டவை...

...எல்லாம்ஒருவ...மற்றவருக்கும்...நால் எல்லோ...ர்கவி என்ற...க் குட்பட்டவ...ர். மனிதனுக்...மனிதனுகச்...மனிதன்...டத்துள் கருத்...ருள் இருக்க...அது இல்லையா...றும் பிண்ட...

...தான் பாடல்...ாடங்கிஇன்று...யோ பாடல்...போது காணப்...பல வேறு...நூர்கள் காலந்...க்களைப் பாடு...ஆனால் எல்...லாமே ஒன்றல்ல. 17-ம் நூற்றாண்டில்வாழ்ந்த துளை மங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் நால்வர் நான்மணிமாலையில்அப்பர் சுவாமிகள் பாடிய 'பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை' என்றகருத்தை அடியொற்றி 'பூவெனப்படுவது பொறிவாழ் ஒன்றே' என்று கூறியுள்ளார். அப்பாடலின் முன்னடியாக பாவெனப்படுவது உன்பாட்டே என்று மணிவாசகப்பெருமானின் பாடலில் மிளிரும் தெய்வீகப் பண்பாழியில் மூழ்கி ஆடி வலிமையுடன் கூறுகின்றார். 'எனப்படுவது' என்றுல் சிறப்பாக— குறிப்பிட்ட ஒன்றுபோல் இன்னென்றில்லையென்பதை அழுத்தமாகச்சொல்வதாகும். எனப்படுவதென்பதை வள்ளுவர் இடங்களில் பலஇடங்களில் கையாண்டு உறுதிகொடுத்திருக்கின்றார்.

படிக்கவேண்டிய நூல்கள்

தமிழ்மக்கள் படிக்கவேண்டிய நூல்களுள் முக்கியமானவை தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் ஆகியவையாகும். இம்மூன்றிலும் ஒப்பரிய தமிழ்ச்செழிப்பை நிச்சயம் எய்த முடியும்.

மணிவாசகரின் திருக்கோவையாரே எல்லாக் கோவைகளுக்கும் முன்தோன்றி நிற்கிறது. ஏனைய கோவைகளுக்கில்லாத சிலச் சிறப்பு அதற்குள்ளது. அதனாலே தான அதற்குதிருக்கோவையார்என்றபெயருண்டானது

மணிவாசகர் காலத்திற்குப் மன்னர்தான் கோவைப் பாடல், பாவைப் பாடல் முதலிய பாவினங்களைத்தோன்றின.

திருவெம்பாவைக்கும் திருப்பாவைக்கும் தொடர்புகாட்டச் சிலர் முயல்வர். எவ்விதத்திலும் ஒன்றுக்கும் மற்றதுக்கும் தொடர்பே கிடையாது. திருவெம்பாவை இவைகளைப்பற்றியே பாடப்பட்டது. அபின்னமாகி இறைவனோடு இணைந்துள்ள இறைவியை வழிபட்டபோதும் மணிவாசகர் இறைவனுடன் கலந்து பாடினார் ஆனால் ஆண்டாள் தாச்சியாரால் பாடப்பட்ட திருப்பாவை பாவையர் நோன்புபற்றியே பேசுகிறது. தகுந்த கணவனையடையப் பாவையர் கொள்ள வேண்டிய நோன்பை வலியுறுத்துகின்றது. திருவெம்பாவை நீராடும்போது மங்கையர் இறைவனைத் துதிக்கவேண்டுமென்ற ஒன்றையே இயம்புவது.

வைணவம், சமணம்ஆகிய சமயங்களில் பாவைப் பாடல் இடம்பெற்ற போதிலும் மணிவாசகரின் பாவையைப்போன்ற சிறப்பைநாம் கண்டுவிடமுடியாது. 'உள்ளேன் பிறதெய்வம் உன்னே வல்லால்' என்கிறார். 'ஆதியந்தமிலா அரும்பெரும் சோதியையாம்பாட' என்றுதான் திருவெம்பாவை தொடங்குகிறது.

உணர்ச்சியே கவிதை

கவிதையென்பதுஉணர்ச்சியி மொழிபெயர்ப்பென்று ஆபிரகாம் என்ற ஆங்கில அறிஞன் கூறுகிறான். மணிவாசகரின் பாடல் அவ்வறிஞனின் கருத்துக்கு முற்றும் முழுதும் உட்பட்டேயுள்ளது. அவரது பாடல்உணர்ச்சியின் ஓட்டத்தை-உணர்ச்சிப் பிரவாகத்தை அப்படியே பிரதிபலிக்கின்றன. இரும்புமனதை உருக்கி கரும்புச்சுவையைப் புகட்டுவது. 'ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய' என்று அவர் பாடிய பாடலுக்கமைய அந்தமெய்யின்பத்தை அவர் பாடல்கள் அனைத்து இறைவனுடன் ஆன்மா நெருங்கியதன்மை சிறப்புற விளக்குகின்றன.

இதுதான் அவர் பாடலை பாவெனப் படுவது உன் பாட்டே'என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறவைத்ததென்பதை யாம் உணரமுடிகிறது

இவ்வாறாக மாணிக்கவாசகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. தியாகராஜா தலைமை தாங்கினார். [நி]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொது அறிவும் உள்ளூர் அறிவும்

வினாக்கள்

1. முதலாவது உலக சமயங்களின் பாராளுமன்றம் எங்கே நடைபெற்றது?
2. சேர். டொன் பிரூட்மென் [Sir Don Bradman] என்பவர் எத்துறையில் தொடர்புகொண்டவர்?
3. 1967-ம் ஆண்டு இலங்கையின் ஆணழகனாக தெரிவுசெய்யப்பட்டவர் யார்?
4. உதயசூரியன் நாடு எனப்படுவது எந்நாடு?
5. ஹெல்ஷிங்கி [Helsinki] எந்நாட்டின் தலைநகரம்?
6. சோவியத் ரஷ்யாவின் முதலாவது தலைவர் யார்?
7. உலகிலே மிகப் பெரிய [Biggest] நதி எது?
8. ஐக்கியநாடுகளின் காரியாலயம் எங்கமைந்துள்ளது.
9. சர்வதேசநீதிமன்றத்தில் எத்தனை பேர் கடமையாற்றுகிறார்கள்?
10. சர்வதேச அணுசக்தி ஏஜன்சி [Iaeda] யின் பொதுஅதிபதி [டிரைக்டர் ஜெனரல்] யார்?
11. ஐக்கிய அமெரிக்க ராச்சியங்களின் [U. S. A] கொடியிலுள்ள இன்னம் யாது?
12. பாகிஸ்தானின் தலைநகரம் யாது?
13. கனடாவின் பிரதமமந்திரி யார்?
14. இலங்கையின் சனப்பிரதிநிதிகளின் சபாநாயகர் யார்?
15. அவுஸ்திரேலியப் புல்வெளிகளின் பெயர் யாது?

விடைகள் 7-ம் பக்கம்

துல்ஹிறியாவில் உருவாகும் மிகப் பெரிய நெசவாலை

— நமது நிருபர் ஆ. விஜயரத்தினம் —

கொட்டாஞ்சேனை, வெள்ளி

தற்சமயம் துல்ஹிறியாவில் நிறுவப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பருத்திப் புடவை ஆலை, ஆசியாவிலேயே மிகப்பெரிய ஒருங்கிணைந்த ஆலைகளுள் ஒன்றாக விளங்கும் சுமார் 20 ஏக்கர் காணியில் கட்டப்படவிருக்கும் கட்டிடங்களுக்குத் தேவைப்படும் நிலம் இப்பொழுது மட்டமாக்கப்பட்டுவிட்டது. நூல்நூற்றல், நெய்தல், மெருகூட்டல் ஆகிய பிரிவுகளுக்கான கட்டிடங்கள் 14 ஏக்கர் காணியில் இடம்பெறும். தொழிற்சாலை, அதனோடு சார்புடைய கட்டிடங்கள், வீடமைப்பு ஆகியவற்றிற்கான மொத்த நிலப்பரப்பு சுமார் சுமார் 150 ஏக்கர்களாகும். இந்நிலம் அரசாங்கத்தால் பெற்றுக் கொள்ளப்பட்டது.

1, 13, 000

நூற்கும் கதிர்கள்

பல்வேறு தரங்களையும் சேர்ந்த 1 கோடியே 70 லட்சம் யார் பருத்தி நூலைத் தயாரிக்கக்கூடிய 1,13,000 நூற்கும் கதிர்கள் இவ்வாலையில் அமைக்கப்படும். இத்தறிகள் முற்றிலும்தன்னியக்கம் உள்ளவையாக இருக்கும். வருடம் ஒன்றுக்கு 1 கோடியே 40 லட்சம் யார் புடவையை உற்பத்திசெய்யக்கூடிய 560 தறிகள் புடவைநெய்யும் பிரிவில் நிறுவப்படும். மெருகூட்டும் பிரிவு, 8 வர்ணங்களில் புடைடகளுக்கு சித்திர வேலைப்பாடு செய்யக்கூடிய வகையில் 4 கோடி யார் புடவையை கையாளக்கூடிய சாதனங்களைக்கொண்டிருக்கும்.

4,000 பேருக்கு வேலை

இந்த ஆலையில் உற்பத்தி ஆரம்பிக்கும்போது, ஒரு ரூபாவுக்கும் ஒன்றரை ரூபாவுக்கும் இடைப்பட்ட விலைகளில் மக்கள் அநேகமாகப் பாவிக்கும் புடவை இனங்கள் தயாரிக்கப்படும். உற்பத்திசெய்யக்கூடிய நூல்கள், புடவை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், நாட்டுக்கு இதன் நிமித்தம் இரண்டரைக்கோடி ரூபாய் வெளிநாட்டுசெலாவணி மிச்சப்படுத்தப்படும். இந்த ஆலையில் சுமார் 4, 000 பேருக்கு வேலை கிடைக்கும்.

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் பயிற்சிபெறுவதற்காக ஏற்கனவே 18 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அரசாங்க எஞ்சினியரிங் கூட்டுத்தாபன எஞ்சினியர்களும் கிழக்கு ஜெர்மன் தொழில்நுட்ப வல்லுநர்களும் வகுத்துள்ள நிர்மாண வேலைத்திட்டத்தின்படி, இந்த ஆலை பூர்த்தியாவதற்கு மூன்றரை வருடங்கள் செல்லும். நூற்றல் பிரிவுக்கான யந்திரங்கள் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வந்துசேரும். நூற்கும், செய்யும், மெருகூட்டும் யந்திரங்கள் 1968 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1970 ஏப்ரல் மாதம் வரை நிறுவப்படும்.

இத்தொழிற்சாலையைக் கட்டி முடிக்க மொத்தம் 17 கோடி ரூபாவரை செலவாகுமெனக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இயந்திர உபகரணங்களுக்கு மட்டும் 10 கோடி ரூபா செலவாகும். இவ்வாலை இந்நாட்டின் பெரிய ஆலையாக விளக்குவதுடன் உள்ளூர் பருத்திப் புடவை தேவையை பெருமளவில் பூர்த்திசெய்யும் எனலாம்.

இ. போ. ச. தொழிலாளர் கோரிக்கை

புலோலி, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு, அகில இலங்கைஇக்கிய மோட்டார் தொழிலாளர் சங்க பொதுகாரியதரிசி திரு. டி ஜி வில்லியம் ஒரு மகஜரை அனுப்பியிருக்கிறார்.

அந்த மகஜரில் இ.போ.ச. தொழிலாளர்களுக்கு பின்வரும் சில கோரிக்கைகள் வேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறது.

சகல இ. போ. ச. தொழிலாளர்களுக்கு மாதாந்தம் 30 ரூபா சம்பளம் கூட்ட வேண்டும்.

சேமலாபநிதியைப் பிணையாகவைத்து ஒரு வருடசம்பளத்தைக் கடனுதவியாகச் சகல தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

நீண்ட காலத்தில் செலுத்தி முடிக்கக் கூடிய வகையில் சகல தொழிலாளர்களுக்கும் வீடு வசதி ஏற்படுத்திக் கொள்ள ஒழுங்குகள் செய்துதர வேண்டும்

சகல தொழிலாளர்களுக்கும் சந்தர்ப்பவிடுதலையாக 7 நாட்கள் வழங்கப்பட வேண்டும்.

இலங்கையில்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

சந்தானம் வருத்தம் தெரிவித்து வார்த்தையை வாபஸ் பெற்றுக் கொண்டார். ம. பொ, சி. பாராட்டுத் தெரிவித்தார்.

யோசனைக்கு பதில்

இஸ்ரேல் பிரதிநிதி கூறிய யோசனைக்கு சந்தானம் பதிலளிக்கையில் இஸ்ரேலை அமைத்வதற்கள் பல்வேறு நாட்டினர் அவர்கள் அவரவர் நாட்டு தொழில்நுட்ப அறிவைக்கொண்டு வந்தவர்கள் மிகுந்த கட்டுப்பாடுடையவர்கள். அவர்களின் உதாரணம் நமக்குப் பொருந்தாது.

கா. பொ. இரத்தினம் பேச்சு

இலங்கைப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் இலங்கையில் தமிழிலும் சிங்களத்திலும், பேதிப்பதற்கு கல்லூரிகளில் ஏற்பாடாகிவிட்டதையும் இஸ்ரேலின் அனுபவத்தையும் குறிப்பிட்டுத் தமிழ் நாட்டில் இந்த நிமிடமே தமிழில் கற்பிக்க தொடங்கவேண்டுமெனவும் வற்புறுத்தினர். தமிழ் மொழி வளர்ச்சியில் இலங்கை அடைந்துள்ள வளர்ச்சியை 'தமிழ்நாடு' அறிந்திருந்தால் விவாதமே தேவையில்லை என்றும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.

அமெரிக்காவைப் பின்பற்றினால்

நாடு செல்வம் கொழிக்கும்

மட்டக்களப்பு, வெள்ளி

எமது நாட்டு விவசாய பொருளாதார முன்னேற்றங்களுக்கு அமெரிக்கா செய்யும் உதவிகள் அளப்பரியன. அமெரிக்காவில் நடைபெறும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றினால் நிச்சயம் எமது நாடும் செல்வம் கொழிக்கும் நாடாக திகழும் என்பதில் ஐயமில்லை.

களுதாவளை இளைஞர் விவசாயக் கழகத்தின் சார்பில் அமெரிக்கத் தகவல் இலாகா அளித்த திரைப்படக்காட்சியை ஆரம்பித்து வைத்துப் பேசிய களுவாஞ்சிக்குடி விவசாய போதனாசிரியர் திரு. கே. தேவதாசன் மேற்கண்டவாறு கூறினார். காட்சியில் கலந்துகொண்ட கல்முனை விவசாயப் போதனாசிரியர் திரு ரீ. கனகசபை தெரிவித்தார்.

வானொலி நிகழ்ச்சிகள்

சனி 13-1-68

இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குர்ல்வகை, 8-00 இசைவேள்வி, 8-15 இஸ்லாமியகீதங்கள.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தினவாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடு பாப்பா. இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 பாட்டு-கமலா பெரியதம்பி, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு-கே. சி. நித்தியானந்தன், 10-00 தேர்ந்தஇசை.

திருச்சி-1

காலை 6-30 மங்களஇசை, 6-45 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-50 பக்திப்பாடல், 6-55 அறஉரை, 7-00 திருப்பாவை, திருப்பள்ளிஎழுச்சி, 7-15 தமிழில் செய்தி, 7-30 கதம்பம், 8-00 திரைப்பட இசை.

பகல் 11-30 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கான நிகழ்ச்சி, 11-55 பிராந்திய செய்திகள், 1-00 பிள்ளைக் கனியமுது, 1-50 இசைமஞ்சரி, 2-00 தமிழில்செய்தி.

மாலை 5-30 தொழிலாளர்களுக்கு.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 திருமணங்கள் சுவர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன- நாடகம், 7-15 தமிழில்செய்தி, 7-30 விவசாயிகளுக்கு, 8-00 திரைப்பட இசை, 8-15 சங்கமும் சங்கடமும் - புலவர் கீரன், 8-40 இசைமாலை- எம். பாலமுரளி கிருஷ்ணா, 9-30 அகிலபாரத சங்கீத நிகழ்ச்சி.

சென்னை-1

காலை 6-00 மங்களஇசை, 6-05 துதிப்பாடல்கள், 6-15 திருப்பாவை — திருப்பள்ளி எழுச்சி 6-30 நிகழ்ச்சிக்குறிப்புகள், 6-35 அருள்வாக்கு, 6-45 இசைஅமுதம் எம்.எம். தண்டபாணி தேசிகர், 7-15 தமிழில் செய்தி, 7-30 பாட்டு, 9-00 மெல்லிசை, 9-15 பாட்டு, 10-15 வாத்திய இசை, 10-30 மதுரகீதம்.

பகல் 11-30 ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு, 11-55 பிராந்தியச் செய்திகள், 12-00 பாட்டு, 12-30 புல்லாங்குழல், 1-00பாட்டு, 1-30 வாத்தியக் கோஷ்டி, 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 4-10 முதியோர்க்குவியல், 5-00 புல்லாங்குழல், 5-30 தொழிலாளர்களுக்கு.

இரவு 6-05 பிராந்தியச் செய்திகள், 6-30 வாத்திய இசை, 6-45 திரைகானம், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம் விவசாயிகளுக்கு, 8-00 நாடகம்- பொங்குக பொங்கல், 9-30 அகிலபாரத சங்கீதநிகழ்ச்சி.

பூசைக்கும், ஆலய வழிபாட்டிற்கும்

காவடி மார்க் கற்பூரம்



○ காவடி மார்க் கற்பூரம் சுத்தமானது. ○ இலகுவில் நொறுங்காதவை. ○ அதிக நேரம் நின்று எரியுந்தன்மையுள்ளவை. ○ காவடி மார்க் கற்பூரம் மற்றைந்த கற்பூரத்திற்கும் சளைக்காதவை. ○ காவடி மார்க் கற்பூரங்கள் குறைந்த விலையில் எங்கும் கிடைக்கும். ○ தூய்மையான மணமுடையது ○ உயரிய தரமுடையது.

3 அவுன்ஸ் ¼ இரு. ½ இரு. பக்கெட்டுகளில் கிடைக்கும். ஒவ்வொரு பக்கெட்டிலும் 128 வில்லைகள் டின்களிலும் கிடைக்கும்.

உங்கள் வியாபாரியிடம் இன்றே கேட்டு வாங்குங்கள்.

தயாரிப்பாளர்கள்:-

ஊவா கற்பூரத் தொழிற்சாலை,

633, அளுத்மாவத்தை ரோட் - கொழும்பு-15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்பிளான் விக்னேஸ்வரா 'ஏ' பிரிவு சம்பியனாகியது

குரும்பசிட்டி, வெள்ளி

குரும்பசிட்டி உதயதாரகை மன்றம் நடாத்தும் 10-வது வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையம் முதற்பிரிவில் ஏ தொகுதி பிரிவுச் சம்பியன் கோஷ்டியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது

எல்லாமாக நான்கு போட்டிகளில் கலந்து கொண்ட இக்கோஷ்டியினர் மூன்று போட்டிகளில் வெற்றியீட்டியும் மற்றொரு ஆட்டம் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளது. தெல்லிப்பளை ஜொலிஸ்ராஸ்விளையாட்டுக்கழகமும் குரும்பசிட்கி உதயதாரகை விளையாட்டுக் கழகம் இணுவில் விளையாட்டுக்கழகம் ஆகிய கோஷ்டிகளை 4-3, 1-0, 6 2 கோல்களால் இக்கோஷ்டி வெற்றி பெற்றுக் கொண்டது. மாவிட்டபுரம் மத்திய விளையாட்டுக் கழகத்துடன் பங்குபற்றிய ஆட்டம் இருதரப்பினரும் 2-2 கோல்களைப் போட்டுக்கொண்டமையால் எவருக்கும் வெற்றிதோல்வியில்லாது முடிந்தது.

இதே சுற்றுப்போட்டியில் 2-ம் பிரிவு பி தொகுதியில் ஏழாலைபாலர் விளையாட்டுக் கழகத்தினர் பிரிவுச் சம்பியனாக தெரிவுசெய்கின்றனர் இவர்கள்கலந்து கொண்ட மூன்று போட்டியிலும்வெற்றிபெற்றனர்.

ஆசிரியருக்கு கடிதம்

யாழ். உதைபந்தாட்ட ரசிகர்கள் கவனி

சென்றசில வருடங்களாக யாழ்ப்பாண மக்களாகிய நாங்கள் சிறந்த உதைபந்தாட்டப் போட்டிகளைக் கண்டுகளிக்கமுடியாதநிலைக்குள்ளாகி வருகின்றோம், கொழும்பு, கண்டி, திருகோணமலை, மட்டக்களப்பு, நுவரேலியாஆகிய இடங்களில் உள்ள உதைபந்தாட்ட ரசிகர்கள் கண்டுகளிக்கும் உதைபந்தாட்டப் போட்டிகளில் மூன்றில் ஒரு பங்கு கூட யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட ரசிகர்களாகிய எமக்குக் பார்க்கக் கிட்டுவதில்லை. அதற்குக்காரணம் மற்றைய மாகாணங்களிலுள்ள உதைபந்தாட்டச் சங்கங்கள் சிறந்த முறையில் செயல் பட்டுவருவதே? ஆனால் எமது யாழ். உதைபந்தாட்டச்சங்கமோ ''புத்தில்உறங்கும் நாகம்போல்'' ஆகிவிட்டது.

யாழ் உதைபந்தாட்டச்சங்கம்ஒருசிலரின்கீழ்பலவருடங்கள்செயல்பட்டு வருவதாலேயே இங்கு உதைபந்தாட்டத்தின்தரம் மிகவும் கீழ் நோக்கிப் போய் கொண்டிருக்கின்றது. மற்றையமாகாண உதைபந்தாட்டவீரர்களுடன் எமது வீரர்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது நாம் மிகவும் மனவேதனையும் வெட்கமும் அடையவேண்டிய வர்களாகின்றோம் மற்றைய மாகாணங்களில் உள்ள சங்கங்கள் உதைபந்தாட்டத்தில் போதிய அனுபவம் பெற்றவர்களாலேயே செயல் பட்டு வருகின்றன. ஆனல் யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்கத்தில் ஒரு சிலர் சிறந்த அனுபவம் பெற்றவர்களாக இருந்தும் உதைபந்தாட்டத்தின் தரம் இவ்வளவு கீழ்நோக்கிப் போவதைக்காணும் போது மிகவும்வேதனைப்படுகின்றோம்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் வருகிற பொதுக் கூட்டத்தில் இதற்கு ஒரு விடிவு ஏற்பட வேண்டுமென யாழ். உதைபந்தாட்ட ரசிகள் எதிர்பார்க்கிறார்கள்.

நிர்மலராஜ்
யாழ்ப்பாணம்

உதைபந்தாட்ட சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் எதிர்வரும் 14-ம் திகதி யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் திரு. ஈ. சபாலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இவ்வருட உதைபந்தாட்டச் சங்கத்தில் முக்கிய பதவிகளை கைப்பற்றுவதற்காக யாழ். மாவட்ட கழகங்களிடமிருந்து வாக்குச் சேகரிக்கும் முயற்சி இப்பொழுது மிகவும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

(வி. நி.)

பொது அறிவும் உள்ளூர் அறிவும்

விடைகள்

1. சிக்காக்கோ [Chicago] நகரில் அமைந்துள்ளது.
2. கிரிக்கெட் விளையாட்டு.
3. பி. ஏ. கருணரத்ன [P. A. Karunaratne].
4. ஜப்பான் [Japan].
5. பின்லாந்து [Finland].
6. வி. ஐ. லெனின் [V. I. Lenin].
7. அமேசன் [Amazon].
8. நியூயோர்க் [NewYork].
9. 15.
10. டாக்டர் சிக்வட் எக்லன்ட் [Dr. Sigvard Ekland]
11. 50 நட்சத்திரங்கள்.
12. ரூவல் பின்டி [Rawval pindi].
13. திரு. லெஸ்டர் பியெசன் [Lestor Pearson].
14. திரு. ஷேர்லி கோறியா [Shirley Corea].
15. டவுன்ஸ் [Downs].

[அடுத்த மாதிரி வினாவிடைகள் 17-1-68-ல் வெளிவரும்]

வவுனியா மாவட்ட உதைபந்தாட்ட போட்டி

வவுனியா, வெள்ளி

வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று ஜெற் லினேஸ் கேல்ட், பூந்தோட்டம் றேன்சேஸ் ஆகியன மோதிக் கொண்டன. ஈற்றில் முறையே 4-0 கோல்கள் பெற்று ஜெற்லினேஸ் வெற்றியீட்டியது.

உதைபந்தாட்டம்

தெலிப்பழை கோஷ்டி வெளிநடப்பு

குரும்பசிட்டி, வெள்ளி

தெல்லிப்பழை ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழக வீரர்கள் ஆட்டம் முடிவடைய முன்னர் போட்டியைப் பகிஷ்கரித்து மைதானத்தை விட்டு வெளி நடப்பு செய்தனர். குரும்பசிட்டி உதயதாரகை மன்ற ஆதரவில் கட்டுவன் மைதானத்தில் மாவிட்டபுரம் மத்திய விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பழை ஜொலிஸ்ராஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற முதற் பிரிவு உதைபந்தாட்டப் போட்டியின் போதுஇச் சம்பவம் நடைபெற்றது.

போட்டி ஆரம்பத்தில் தெல்லிப்பழைக் கோஷ்டியே முதற் கோலைப் போட்டுக் கொண்டது. இதையடுத்து மாவிட்டபுரம் வீரர் திறமையாகவிளையாடி அடுத்தடுத்து மூன்று கோல்களை ஒரேயடியாக விளாசித்தள்ளினர். இடைவேளையின் போது மாவிட்டபுரம் 3-1 கோல்களால் முன்னணியில் திகழ்ந்தது. இடைவேளையின் பின் தெல்லிப்பழை கோஷ்டியினர் அபாரமாக விளையாட ஆரம்பித்தனர். இதனல் மேலும் ஒரு கோல் இவர்களினல் போட்டுக் கொள்ள முடிந்தது. இச்சந்தர்ப்பத்தில் பஞ்சலிங்கி உதையொன்றைத்தமக்கு வழங்கத்தவறியதாக மத்தியஸ்தர் மேல் குற்றம் சுமத்தினர். மத்தியஸ்தரின் கட்டுப்பாடுகளுக்குகீழ்ப்படியமறுத்துவிட்ட தெல்லிப்பழை வீரர்கள் அனைவரும் மைதானத்தை விட்டு வெளியேறினர். போட்டி முடிவடைய சுமார் 10 நிமிடங்கள் மேலும் இருந்தன. விளையாட்டு ரசிகர்கள் இத்தருணத்தில் மைதானத்தில் பிரவேசித்தனர். இதனல் போட்டி சூழப்பத்தில்முடிவடைய நேரிட்டது.

இவ் ஆட்டம் குறித்து தெல்லிப்பழைக் கோஷ்டி சுற்றுப் போட்டி அமைப்பாளர்களிடம் புகார் தெரிவித்துள்ளது.

'வெற்றிக்கு வழி'

உடுவில் புதன்

''எந்த ஒரு காரியத்தை நாம் செய்யவேண்டுமானலும் சிந்தனையும் நிதானமும் அவசியம் இருக்கவேண்டும். சிந்தித்து செயலாற்றுவதனல் நிச்சயம் வெற்றியடைய முடியும். லிளையாட்டிலும்சரி, வாழ்க்கையிலும் சரி நாம் இவற்றைக் கையாளத் தவறக்கூடாது.'' நேற்று மாலை உடுவில் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினர் ஆண்டுவிழாக் கொண்டாடியபோது சிறப்புரை நிகழ்த்திய உடுவில் கிராமசபை அக்கிராசனர் திரு. ச. முத்துலிங்கம் மேற்கண்டவாறு கூறினர். திரு. எம். கணேசானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தலைவர் உட்பட வேறு பலரும் பேசினர்.

கூட்டமுடிவில் நடப்பு வருடத்துக்கான உத்தியோகத்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். உத்தியோகத்தர்கள் விபரம் பின்வருமாறு:-

தலைவர் திரு. எம். கணேசானந்தன். உபதலைவர் திரு. ஏ. சித்திரவேலு. காரியதரிசி திரு. ஆர். ஆர். இராசையா.

சமமான முடிவு

குரும்பசிட்டி, வெள்ளி

மாவிட்டபுரம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூக நிலையமும் மோதிக்கொண்ட முதற்பிரிவுஉதைபந்தாட்டப் போட்டி இறுதி நேரத்தில் பரபரப்பாகக் காணப்பட்டு முடிவில் சமமாக முடிவுற்றது. இருதரப்புக் கோஷ்டிகளும்தலா இரண்டு கோல்களைப் போட்டுக் கொண்டன.

போட்டி ஆரம்பத்தில் வெகு இலகுவான முறையில் சுவர்ச்சியான பாசிங் மூலம் குப்பிளான் முன்னணிவீரர் தமது முதல் கோலை விளாசினர். இதன்பின் பஞ்சலிங்கி உதைமூலம் மேலும் ஒரு கோலைப் போட்டு எண்ணிக்கையை 2—0 ஆக உயர்த்தினர் இறுதியில் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது இப்போட்டிக்கு திரு. பத்மநாதன் நடுவராகப் பணிபுரிந்தார்.

இதே தினத்தன்று போயிட்டி மகாஜன விளையாட்டுக்கழகமும் மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகமும் கலந்து கொண்ட இரண்டாம் பிரிவுப்போட்டியும் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. இருகோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் பெற்றிருந்தனர் திரு. துரைசிங்கம் இப்போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார்.

மேற்படி இரு போட்டிகளும் குரும்பசிட்டி உதயதாரகை மன்ற 10-வது வருட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அமைப்பின்கீழ் கட்டுவன் விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றன.

நயினதீவில் புதிய சந்தை திறப்பு விழா

நயினதீவு, வெள்ளி

நயினதீவு கிராமசபையால் கட்டப்பட்டு பலவருடங்களாக இயங்காதிருந்த நயினதீவு சந்தையை வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் திறந்து வைத்தார்.

விசேஷ புஸ், ரயில் சேவை

நாவலப்பிட்டி, வெள்ளி

சிவனொளிபாத யாத்திரீகர்களின் வசதியை மேற்கொண்டு புகையிரதப்பகுதி விசேஷ சேவைகளை ஜனவரிமுதல் ஏப்ரல் மாதம் வரை நடாத்த ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

அட்டன்புகையிரத நிலையத்திலிருந்து கங்குவத்தை (அடிவாரம்) வரை தொடர் பஸ்சேவை நடாத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

உபகாரியதரிசி திரு. ஏ. ஆர். திருநாவுக்கரசு. தலைவர் திரு. எம். பாலசுப்பிரமணியம். ஏழுபேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

வதிரி டைமன்ஸ் வெற்றி

உடுப்பிட்டி, வெள்ளி

வதிரிபொமேர்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற டி. ரி, சாமுவேல் ஞாபகார்த்தக்கேடய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதித் தெரிவுப்போட்டியில் வதிரி யங் டைமன்ஸ் விளையாட்டுக் கழகமும், வல்வெட்டித்துறை புளூஸ் கோஷ்டியினரும் மோதிக் கொண்டனர்.

இப்போட்டியில் வதிரி டைமன்ட்ஸ் கோஷ்டி, வல்லை புளூஸ் கோஷ்டியை 3-2 கோல்களால்வெற்றியீட்டியது. திரு. எஸ். புவனநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். பொமேர்ஸ்விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிநடைபெற்றது.

இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டிய வீரர்களுக்கும். யாழ்ப்பாணத்தில் வெற்றியீட்டிய வீரர்களுக்குமிடையே இறுதிகரப்பந்தாட்டப்போட்டி நாளை மாலை யாழ்ப்பாண பொலிஸ் அதிபர் திரு. எஸ். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும். வடமாகாணக் கரப்பந்தாட்டச் சங்கக்காரியதரிசி திரு. டபிள்யூ. ஆர். அருளையா இதற்கான ஆயத்தங்களைச் செய்துள்ளார்.

இன்று

யாழ்ப்பாணம், சனி

கைதடி சைவ ஐக்கிய சங்கத்தினர் கைதடி தெற்கு வைரவர் கோவில் முன்றலில் இன்று மாலை 8 மணிக்கு திருவெம்பாவையைகொண்டாடுகின்றனர். கதாப்பிரசங்கங்கள் நடைபெறும்.

[நி]

யாழ்ப்பாணம், சனி

அமெரிக்கதகவல் பகுதியினரால் யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலையத்திலுள்ள அமெரிக்க நூல்பிரிவு மண்டபத்தில் இன்றுமாலை 6 மணிக்கு செய்தி திரைப்படம் இலவசமாக காண்பிக்கப்படும்.

வாள் வெட்டுக்கு ஆளானார்!

யாழ்ப்பாணம், சனி

மந்திரிப்புலம் கொக்குவில் மேற்கைச்சேர்ந்த நா. நடேசன் பலத்தவாள்வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முருகன் மகேசனுக்கும். நடேசனுக்கும் இடையே ஏற்பட்ட மனஸ்தாபமே இவ்வாள்வெட்டுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

சந்தேக நபரான முருகன் மகேசன் தலைமறைவாகி விட்டாரென்றும் இவரைத் தேடி பொலிசார் வலை விரித்துள்ளனரென்றும் கூறப்படுகிறது.

தேவை

இலங்கையில் உள்ள ஒவ்வொரு தேர்தல் தொகுதிகளுக்கும் வியாபாரப் பிரதிநிதிகள் தேவை. தங்கள் தொகுதிகளிலிருந்தே வேலை செய்யவேண்டும். 18 வயதிலிருந்து 30 வயதுக்குட்பட்டவர்களும் ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ 8-ம் வகுப்புக்கு மேல் சித்தியடைந்தவர்களும்தான் விண்ணப்பித்தல் வேண்டும். நல்ல சம்பளமும் கமிஷனும் உயர்வும் உண்டு. விண்ணப்பிக்கவும்.

கொண்டிநென்டல் ரேடிங் கொம்பனி,
49/10, ஐஸ்லண்ட் பில்டிங்,
கோல்பேஸ், கொழும்பு—3

407

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுப் பெண்கள் பாவனையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாண வீட்டுப் பெண்கள், பாவனையாளர் சங்கம் ஒன்றை நிறுவுவதற்கான அமைப்பு கமிட்டி யொன்று அரசாங்கலிகிதர் சேவை சங்க மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

நிரூவாளர்கள் எஸ். வேலுப்பிள்ளை, எஸ். செல்லத்துரை, எஸ். இரத்தினசபாபதி, வி. சண்முகநாதன், எஸ். வைரமுத்து ஆகியோர் அமைப்புகமிட்டியில் தெரிவுசெய்யப்பட்டனர்.

உணவுப்பொருட்கள் தட்டுப்பாடு, கறுப்பு சந்தைக்காரர் பற்றி இச் சங்கம் உடனுக்குடன் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்குமெனக் கூறப்படுகிறது.

இன்ஸ்பெக்டர் 'சூட்' என்று...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சென்றேம். நான் வானில் இருந்தபடி பீடிக் கட்டுகளை எடுத்துக் கொடுக்க, இறந்தவர் கடைகளுக்குக் கொடுத்து பணம் வாங்குவார். நெல்லியடியில் கடைசியாக வல்லிபுரம் என்பவரது கடைக்கு பீடிகளைக் கொடுத்தார். வியாபாரம் முடிந்ததும், அங்கிருந்து திரும்பி உடுப்பிட்டிப் பாதையால் வல்வெட்டித்துறைக்கு வந்தோம். இறந்தவர் எனக்குப் பக்கத்திலுள்ள முன் ஆசனத்தில் இருந்தார். அவர் அந்நேரத்தில் சட்டையும் சாரமும் அணிந்திருந்தார்.

உடுப்பிட்டிப் பாதையில் வல்வெட்டித்துறைக்கு வரும் போது உடுப்பிட்டிப் பாதையிலுள்ள பொலிஸ் நிலையத்தைக் கடந்தே வர வேண்டும். சந்திக்கு கிட்டே வரும் போது சனசமூக நிலையத்துக்குப் பக்கத்திலுள்ள மலசல கூடத்துக்கு அருகாமையில் உள்ள ரோட்டில் இன்ஸ்பெக்டரும், வேறு இரு பொலிசாரும் நிற்பதைக் கண்டேன். இன்ஸ்பெக்டர் செலுத்திக் கொண்டு போய்க் கொண்டிருந்த வாகனத்தை நிறுத்தும்படி கையைக் காட்டினார். உடனே வாகனத்தை நான் நிறுத்தினேன்.

வானில் இருந்த சிவஞானத்தை இன்ஸ்பெக்டர் "கெற்டவுண்" என ஆங்கிலத்திலும், "இறங்கடா" எனத் தமிழிலும் சொன்னார். அவர் உடனே இறங்கினார். நான் அப்போது டிரைவர் ஆசனத்தில் இருந்தேன். இறங்கியவர் வியாபாரத்தால் வருவதாக சொன்னார். இறங்கியவருக்கு இன்ஸ்பெக்டர் தான் வைத்திருந்த தடியால் ஒங்கினார். உடனே நான் இறங்கி சந்தைப் பக்கம் போனேன். அப்போ இறங்கியவர் 'ஐயோ' என்றார். இன்ஸ்பெக்டருடன் நின்ற ஒரு பொலிஸ்காரர் தடியும், மற்றவர் துப்பாக்கியும் வைத்திருந்தார். சந்தைப்பக்கம் போன நான் அதில் நின்று பார்த்த போது இன்ஸ்பெக்டர் "சூட்" என்று சொன்னார்.

அந்நேரத்தில் மலசல கூடத்தடியில் நின்ற பொலிஸ்காரர் துப்பாக்கியை நீட்டிச் சுட்டார். உடனே இறந்தவர் ஐயோ என்று நிலத்தில் விழுந்தார்.

இன்ஸ்பெக்டர் சூட் என்று சொன்னதை சந்தைப் பக்கம் நின்ற நான் தெளிவாகக் கேட்டேன். கண்ணுலும் கண்டேன். உடனே நான் சந்தைக் கூடாக பருத்தித்துறை ரோட்டால் வீட்டிற்குச் சென்றேன். வீட்டிற்குச் சென்றதும் நடந்த சம்பவத்தை மனைவிக்குச் சொன்னேன். அதன் பின்னர் சம்பவத்தை இறந்தவரின் உறவினர்களுக்கு தெரியப் படுத்தினேன். மறுநாள் காலை சம்பவம் நடைபெற்ற இடத்திற்குச் சென்றேன். இறந்தவரைச் சுற்றி பலர் அழுது கொண்டிருந்தனர். அச்சமயம் ஸ்தலத்திற்கு வந்து விசாரணை செய்த மாஜிஸ்திரேட் முன்னிலையில் நான் சாட்சியமளித்தேன்.

யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியமும் சாட்சியமளித்தார். தொடர்ந்து விசாரணை நாளை நடைபெறும்.

நாதஸ்வர வித்துவான் திரும்பினார்

குரும்பசிட்டி, சனி

தமிழகத்தில் நடைபெற்ற இசைவிழாக்களில் கலந்து கொண்ட நாதசுர கான கலாநிதி என். கே. பத்மநாதன் இன்று மாலை விமான மூலம் தாயகம் திரும்பிய போது பலாலி விமான நிலையத்தில் நாதஸ்வர இசையாளர், கலைஞர்கள், பொது மக்கள் ஆகியோரால் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டார். ——

அரசாங்கத்துக்கு..

[1-ம் பக்க தொடர்ச்சி]

ந்து கொள்ளச் சென்ற திரு. இராசதுரை இன்று இலங்கை வந்து சேருவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

நாளை நடைபெறும் கூட்டம் முக்கிய கூட்டமாகக் கருதப்படுவதால், வாலிப முன்னணி உறுப்பினர்கள் எல்லோரும் கலந்துகொள்வார்களெனத் தெரியவருகிறது.

இக் கூட்டத்தில் கல்முனை இடைத்தேர்தல் பிரசாரம், அமரர் வன்னிய சிங்கத்தின் சிலைநிறுவுவதற்கு நிதிசேர்த்தல், யாழ்ப்பாண மாநகர சபைத்தேர்தல், மற்றும் தமிழ்பேசும் மக்களை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகள் பற்றி ஆராயப்படுமெனத் தெரிய வருகிறது.

இவ்வருடம் வாலிப முன்னணி மகாநாட்டை [illegible] நடாத்துவதென்றும் [illegible] ஆலோசனை செய்யப்படுமெனத் தெரியவருகிறது.

நாடும் நடப்பும்...

[5-ம் பக்க தொடர்ச்சி]

"இருமாதங்களுக்கு முன்பாக, டாக்டர் ஷம்பே அவர்கள், பத்து ஆண்டுகளாக தான் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் பயனாக மனித இருதயங்களை மாற்றும் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள ஆயத்தமாக இருப்பதாக பகிரங்கப்படுத்தினார்.

கேப் டவுனில் இருக்கும் டாக்டர் பேர்னட் அவர்களுக்கே இத்துறையில் முதலாவது பயிற்சியை நடாத்தும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. சந்தர்ப்பம் இவ்வாறு அமைந்துவிட்டது. டாக்டர் ஷம்பே அவரிகள் வெளியிட்ட கருத்துக்களை மையமாகக்கொண்டே இருதய மாற்று சிகிச்சை நடைபெற்றிருக்கிறது என்பது கண்கூடு." பாவம் அமெரிக்கர்.

ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று மாலை மொரட்டுவையில் இழுக்கப்பட்ட 176-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு

42 E 0498 ரூ 100,000

2-வது பரிசு

01 L 0459 ரூ. 40,000

3 வது பரிசு

42 X 0611 ரூ. 10,000

தலா ரூபா946-60 பெறும் 100 டிக்கட்டுகள்:

40	Z 0172	20	J 0957
44	J 0102	33	H 0009
04	W 0233	29	R 0214
07	H 0255	14	Z 0712
32	B 0337	09	S 0104
42	A 0370	18	Q 0336
42	V 0467	08	X 0897
36	F 0370	30	L 0971
41	G 0764	10	Q 0170
32	D 0155	15	K 0626
38	M 0234	10	P 0299
01	U 0782	45	B 0176
25	T 0896	31	L 0339
18	Z 0380	38	D 0833
40	F 0871	50	X 0117
10	Q 0623	47	A 0601
14	F 0792	07	K 0814
48	F 0913	10	Q 0701
45	Z 0788	30	U 0443
39	H 0049	30	C 0995
17	L 0484	18	D 0981
21	E 0519	22	S 0776
13	D 0139	05	J 0920
30	G 0556	46	X 0818
47	F 0799	09	R 0371
30	C 0328	42	F 0047
19	L 0966	42	M 0680
47	J 0065	06	M 0682
24	O 0374	30	X 0079
19	J 0171	28	V 0932
27	S 0875	23	W 0322
28	X 0489	16	U 0816
21	X 0906	27	A 0310
38	L 0146	23	G 0740
19	J 0878	32	N 0263
21	W 0934	13	W 0085
42	Z 0554	20	D 0025
11	L 0203	27	A 0499
16	W 0331	23	L 0952
04	B 0378	23	S 0809
11	J 0113	10	T 0830
35	T 0999	09	K 0999
12	E 0680	47	Y 0472
49	o 0034	08	T 0317
37	Q 0285	16	X 0969
46	P 0092	49	S 0908
28	C 0528	21	A 0241
21	L 0992	25	U 0701
39	F 0804	02	P 0260
44	o 0007	05	V 0560

[இவை யாவும் உறுதிப் படுத்தப்பட வேண்டியவை]

திருக்குர் ஆனின் 1400-ம் ஆண்டு பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் திருக்குர் ஆனின் 1400-ம் ஆண்டின் பூர்த்திவிழா யாழ் முஸ்லிம் சமூக சேவா சங்கத்தார்பில் வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணியளவில் ஆலி ஜனுப் என். எம். முகமது மீரான் முஹியித்தீன் ஆலிம் (இலங்கை வானொலி திருக்குர் ஆன் விரிவுரையாளர்) தலைமையில் நிகழும்.

'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்'

யாழ்ப்பாணம், சனி

செஞ்சொற் கொண்டல் வித்துவான் சொ. சிங்காரவேலன் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்' என்னும் பொருளில் இன்று மாலை 5-30 மணிக்கு யாழ் நகர மண்டபத்தில் சொற்பொழிவாற்றவிருக்கிறார்

யாழ் இலக்கியவட்டம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. [illegible] அனைவரும் [illegible] இச்சொற்பொழிவு நடைபெறும்.

ஐ. நா. அபிவிருத்தித்திட்டப் பிரிவு

இலங்கைக்கு வழங்கும்

கொழும்பு, வெள்ளி

ஐக்கியநாடு அபிவிருத்தித் திட்டப் பிரிவு இலங்கையின் 4 வருட பொருளாதார முன்னேற்றத் திட்டத்துக்கு 19 லட்சம் ரூபாயை வழங்கவிருக்கிறது. ஐக்கியநாட்டு அபிவிருத்தித்திட்டம் வழங்கும் இந்த உதவித்திட்டத்தின் படி 69நாடுகள் பயனடையும்.

இலங்கை வகுத்துள்ள புதிய நான்கு வருடத் திட்

நெடுந்தீவு மாணவரின் சாதனை

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு மாவித்தியாலயத்தில் இருந்து இம்முறை தீவுப்பகுதி ஆசிரியர் சங்கத்தால் நடாத்தப் பட்ட 6ம் வகுப்புப் பரீட்சைக்குத் தோற்றிய 34 மாணவர்களில் 29 மாணவர்கள் சித்தி அடைந்துள்ளார்கள். சித்தியடைந்த மாணவர்களில் 20 மாணவர்கள் முதலாம் இரண்டாம் பிரிவுகளில் மிகத் திறமையாகச் சித்தியடைந்துள்ளார்கள். நவீன கணித்தில் மாணவர்கள் காட்டிய தேர்ச்சி குறிப்பிடத் தக்கதாகும். ——

மூன்றும் எதிரி...

[1-ம் பக்க தொடர்ச்சி]

டோம். அந்நேரத்தில் மூன்றும் எதிரியும் வேறு சிலரும் அவ்விடம் வந்து எங்கள் இருவரையும் தாக்கி விட்டு அவரைக் கூட்டிக் கொண்டு போனார்கள். எங்களைத் தாக்கும்போது நாங்களும் அவர்களைத் தாக்கினோம். பின்னர் நாங்கள் பக்கத்திலுள்ள ஆஸ்பத்திரிக்குள் சென்று வைத்திய அதிகாரி டாக்டர் பாலகிருஷ்ணனிடம் பொலிஸ் நிலையத்திற்கு சம்பவம் நடந்தது பற்றிச் சொல்லி டெலிபோன் செய்யுமாறு கேட்டோம். அதன்படி அவர் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தார். அதைத் தொடர்ந்து இன்ஸ்பெக்டர் பத்திராஜ தலைமையில் ஒரு பொலிஸ் கோஷ்டி ஒன்று அவ்விடத்திற்கு வந்தது. அவ்விடத்தில் வைத்து முதலாம், இரண்டாம் எதிரிகளைக் கைது செய்தோம்.

இவ்வாறு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தரான திரு. லயனல் என்பவர் பருத்தித்துறை மஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கும் போது கூறினார்.

இவ்வழக்கில்வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்களான திரு. லயனல், திரு. அல்பேர்ட் ஆகிய இருவரையும் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 7-ந் திகதி கடமை செய்ய விடாது தடுத்ததாகவும், தாக்கியதாகவும் அதே இடத்தைச் சேர்ந்த தங்கவேலாயுதம், சோமசுந்தரம், சண்முகம்பிள்ளை ஆகிய மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன், திரு. அல்பேர்ட் ஆகியோர் சாட்சியமளித்த பின் மாஜிஸ்டிரேட் மேல் விசாரணையை ஒத்திவைத்தார்

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் திரு. எம். சிவசிதம்பரஓ, வழக்கறிஞர்கள் திரு. கே. இரத்தினசிங்கம், திரு. என். நடராசா, திரு. வி. செல்லத்தம்பி ஆகியோர் ஆஜராளர்கள்.

இன்ஸ்பெக்டர் திரு. சி. எல். விஜயதிலகா வழக்கை நடத்தினார்.

ரூ. 19 லட்சம்

டத்திற்கு 27லட்சம் ரூபாய் செலவாகுமென கணக்கிடப் பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு 19லட்சம் ரூபாய் ஐக்கிய நாட்டு அபிவிருத்தித் திட்டப் பிரிவு வழங்குமெனத் தெரிவிக்கப் பட்டுள்ளது மிகுதியை இலங்கை அரசாங்கம் தனது பொறுப்பில் செய்து முடிக்கும்.

சிறிமா தெரி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சிட்னி டி சொய்சாவின் பெயரை தகவல் கொடுத்தவர் முக்கியமாகக் குறிப்பிட்டதாகவும் தற்போதைய அரசாங்கத்துக்குப் பதிலாக பார்லிமெண்ட் முறையல்லாத யு. என். பி. கட்சியை ஏற்படுத்தவு சில எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்யவும் திட்டமிடப்பட்டதாகவும் தகவல் கிடைத்ததாகவும் திருமதி பண்டாரநாயகா தெரிவித்தார்.

இவ்வாறு பிரதம மந்திரி தமது அறிக்கையில் கூறினார். தகவல் கொடுத்தவரின் பெயரை வெளியிட திருமதி பண்டாரநாயகா மறுத்து விட்டதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இதேபோல் தொம்பே எம். பி. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் அதிகாரிகளிடம் தெரிவித்திருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

இதுஒருபாரதூரமானவிஷயம், பொறுப்பானவர்களிடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. இதன் உண்மைகள் பற்றி உடனடியாக ஆராயவும் புலன்விசாரணை நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தகவல் கொடுத்தவர்கள் இந்த முயற்சியில் ஒத்துழைக்கவேண்டும் என்று பிரதம மந்திரி கேட்டுக் கொண்டார்.

——

மாட்டு வண்டிச் சண்டை

இருவர் ஆஸ்பத்திரியில்

புலோலி, வெள்ளி

கரவெட்டி கிழக்கு கிழவி தோட்டத்தில் மாட்டுவண்டியால் ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

வீதியால்சென்ற மாட்டு வண்டியை மறிக்கும் பொழுது ஏற்பட்ட வாக்கு வாதம் கைகலப்பாகமாறியதாம். இரு மாட்டுவண்டிகளின் 'பொக்கு' ஏற்றிக் கொண்டு வீதிவழியாக வருகையில் இருவர் வண்டிகளை நிறுத்தி மாடு மறித்ததைத் தொடர்ந்தே இக்கைகலப்பு ஏற்பட்டதாம்.

பொலிசார் தொடர்ந்து விசாரணைசெய்கின்றனர்.

— —

இரு கைத்தொழில் நீதிமன்றங்கள்

கொழும்பு, வெள்ளி

தொழில் மந்திரி திரு எம். முகமத், நேற்று இரு கைத்தொழில் நீதிமன்றங்களை ஆரம்பித்து வைத்தார். கைத்தொழில் தகராறு சட்டத்தின்கீழ் இந்த கைத்தொழில் நீதிமன்றங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன

இங்கு நடைபெறும் வேலை நிறுத்தங்கள்பற்றி விசாரணை செய்வதற்காகவே இந்த நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன.

— —

புலோலியில்

இப்பகுதிக்கு மின்சாரம்

புலோலி, வெள்ளி

புலோலி கிராமச் சங்கத்தின் எல்லைக்குள் இருக்கும் ஒரு பகுதிக்கு அடுத்தமாத முற்பகுதியில் மின்சாரம் வழங்கப்பட இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org